பல்கலைக் கழகங்களில் சைவக் கலாசாரத்துககுத் தனிப்பகுதி வேண்டும்

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால்பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 92
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 31 ரபி. அவ்7 வியாழக்கிழமை [14-5-70]

ஈழநாடு சந்தா

	தினப்பதிப்பு	வாரப்பதிப்பு
3 மாதம்	ரூ. 18-00	ரூ. 4-00
6 மாதம்	ரூ. 34-00	ரூ. 7-50
1 வருடம்	ரூ. 66-00	ரூ. 14-00

முற்பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்.

அகில இலங்கை சைவ மாநாடு நிறைவேற்றிய தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா
''காசி அண்ணுமலை பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்தத்துக்குத் தனித் துறைகள் இருப்பதுபோல் இலங்கைப் பல்கலைக் கழகங்களிலும் சைவ சித்தாந்தத்திற்கென தனித்துறை ஏற்படவேண்டும்'' எனக் கோரும் தீர்மானம் சைவ மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்புப் புதிய பாடத் திட்டத்தை நீக்கிப் பழையது போல சைவ சிந்தாந்தத்திற்கு முக்கிய இடம் அளிக்க ஒப்புதல் அளித்து வரும் கல்விப் பகுதியைப் பாராட்டும் தீர்மானமும் இப்பாடத் திட்டத்தில் சைவ சித்தாந்தத்திற்கு மாருகக் கருத்துகள் இடம் பெருமல் சைவசித்தாந்த நூற் பதிப்புகளும்திருமுறைகளும் முக்கிய இடத்தை வகிக்க வேண்டும என்று கோரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சித்தாந்த வித்தகர் வே. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இம் மகா நாட்டில் பண்டிதர் மு கந்தையா பேசுகையில் புதிய சைவப் பாடத்திட்டத்தை வகுப்பவர்கள் நாற்பாதத்தை நழுவ விடாது சைவசமய பாடத்திட்டத்தை வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சைவப்புலவர் முதலிய தேர்வுகளில் சித்தியடைந்தவர்களுக்கு தராதரப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

திரு அ பாலடுவாயன் பிரமஸ்ரீ இரத்தினேஸ்வரக் குருக்கள் ஆகியோரும் பேசினர்.

நாடகங்களை தேர்தலுக்கு பயன்படுத்தலாமா?

சாதிப்பிரச்னையைத்தீர்க்க சிவநேசன் கூறும் வழி

உடுவில், புதன்
''அரசியல் துறையில் தமிழினத்தின் அந்தஸ்து குறைந்து விட்டது பொருளாதார துறையில் கடந்த 15 ஆண்டுகளாக எந்தவொரு முன்னேற்றமுமில்லை. கல்வித்துறையில் கூட ஒரு பல்கலைக்கழகம் அமைக்கமுடியாதிருக்கிறது. இத்தனைக்குமிடையே சமூகத்துறையில் உள்ளூர்ப் பிரிவினைகளை ஏற்படுத்தி சாதிப் பிரச்சனையை அரசியல் பிரச்னையாக்கி தமிழ் சமூகம் இன்னல்படுகிறது. இவைகள் அனைத்திற்கும் விடுதலை கிடைக்கவேண்டுமானுல், சிங்கள இனத்துடன் இணைந்து செயல்படும் காங்கிரஸ் கட்சி பெரும் பலத்துடன் ஆட்சி மன்றம் செல்லவேண்டும்.''

சுன்னுகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய உடுவில் தொகுதி தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் திரு. என். சிவநேசன் மையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சிவநேசன் தொடர்ந்து பேசியதாவது:

நம்மிடையே உள்ளசாதிப் பிரச்னை ஒரு சமய பிரச்னை இதில் சைவமதத்தவர்களே தலையிடவேண்டும். இதை ஒரு அரசியல் பிரச்னையாக்கிவேற்று மதத்தவர்கள் இதில்தலையிடச் செய்துள்ளனர்.

இப்பிரச்னையைச் சட்ட மூலம் தீர்க்கமுடியாது. பெரும்பான்மை பௌத்த சமயத்தவர்களைக் கொண்டுள்ள சிங்கள அரசாங்கம் இந்து சமய கொள்கைகள் இப்படித்தான் அமையவேண்டும் என்றுசட்டமூலம் கூறுவதை நாம் எப்படி ஏற்றுக் கொள்வது? இப்பிரச்னை தீரவேண்டுமென்ருல் இந்து மக்கள் தலைவர்கள் ஒன்றுகூடி ஒற்றுமையாகப்பேசி சுமுகமாகத் தீர்க்கவேண்டும் பலாத்கார வழியிலோ, சட்டமூலமோ சாதிப் பிரச்னை

வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் அட்டோர்னி ஜெனரலுடன் ஆலோசனை

யாழ்ப்பாணம், வியா
தேர்தல் பிரசாரத்துக்கு நாடகங்களைப் பயன்படுத்தலாமா? நாடக வசனங்கள் ஓர் அரசியல் கட்சியினர் மற்ருெரு அரசியல் கட்சியினரைக் கண்டிக்கும் முறையில் அமைந்திருந்தால் அந்த நாடகத்தை மேடையேற்றுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாமா?

இதுபற்றி ஆலோசனை கூறுமாறு வடபகுதிப்பொலிசார் பொலிஸ் அதிபர் மூலம் அட்டர்னி ஜெனரலைக் கேட்டுள்ளனர்.

வடபகுதியிலுள்ள பிரபல தமிழ்க் கட்சியொன்றின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் நாடகம் ஒன்று நடித்துக் காண்பிக்கப்பட்டு வருவதாகவும் இந்தநாடகம் தங்கள் கட்சியினரை இழிவு படுத்துவதாகவும் மற்ருெரு பிரபல தமிழ்க் கட்சி வடபகுதிப் பொலிஸ் அதிபருக்கு புகார் செய்ததைத் தொடர்ந்தே பொலிசார் இது சம்பந்தமாக அட்டர்னி ஜெனரலின் ஆலோசனையைக் கோரியிருக்கின்றனர்.

''முடிவு திகதியை பின்போடுக''

பருத்தித்துறை, புதன்
மகாரகம பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளின் பிரவேசத்துக்கான மனுப்பத்திரங்களின் முடிவு திகதி இம்மாதம் 10-ம்திகதியென இலங்கை அரசாங்க வர்த்தகமானியில் வெளிவந்துள்ளதைத் தொடர்ந்து அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் மேற்படி முடிவு திகதியைப் பின்போடுமாறு கல்வியமைச்சை வேண்டியுள்ளது.

1969 மார்கழியில் நடை க. பொ. த. (சாதாரண)

கள்ளுக் கொட்டில்களை மூடுவதுபற்றி சிபார்சு

தேர்தல் காலங்களில் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படுவதற்கு வடபகுதியில் கள்ளுக் கொட்டில்கள் நள்ளிரவுவரை திறந்திருப்பதும் ஒரு காரணமெனக் கருதி இம்மாதம் 20-ந்தேதி முதல் 28ம் திகதிவரை ருக்கும்கலால் கமிஷனருக்கும் வடபகுதிப் பொலிசார் செயதிருந்த சிபார்சை ஏற்றுக்கொண்டு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் இது சம்பந்தமாக ஒரு முடிவைச் செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு உள்நாட்டமைச்

தெல்லிப்பழை

கோடரி தாக்குதல் இருவரும் ரூ.500 பிணையில்

மாவிட்டபுரம், புதன்
தெல்லிப்பளை கோடரி தாக்குதல் சம்பவம்குறித்து கைதானவர்கள் இருவரும் தலா 500 ரூபா பிணையில் விடப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பளையில்குடும்பத் தகராறு காரணமாக நடந்த கோடரி தாக்குதல் சம்பவத்தில் ஆ. தில்லைநாயகம் என்பவர் படுகாயம் அடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிருர்.

சுன்னுகம் பொலிஸ் பகுதி குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி திரு. வி. செல்லையா தீவிரவிசாரணையில் ஈடுபட்டு இருவரைக் கைது செய்தார்.

பிரஸ்தாப நபர்கள் மல்லாகம்நீதிபதி திரு. எஸ். ஆனந்தக் குமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிபதி இருவரையும் 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து 15-ம் திகதி மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

'உரிமைப் போராட்டத்தையே வரலாறு கூறுகிறது'
— பண்டிதர்இரத்தினம்

வேலணை, புதன்
''உலகவரலாற்றை நோக்கும் போது மக்கள்தம் உரிமைக்காகப் போராடுவதையே காண்கிரூேம். இதை அறியாதவர்களே எங்கள் மக்களைக் கூறுபோடுவதுடன் தமிழரசுக்கட்சி இத்தனை காலமும் என்ன செய்தது எனவும் கேட்கின்றனர்.''

இவ்வாறுசரவணைநாகேஸ்வரி வித்தியாலயத்திற்கருகேயுள்ள மைதானத்தில் [illegible] நடத்தப்பட்ட தமிழரசுக் கட்சிப்பிரசாரக்கூட்டத்தின் போது முன்னைநாள் கிளிநொச்சிப் பிரதிநிதியும் ஊர்தர் கா. பொ. இரத்தினம் பேசினர்.

''அன்றும் இன்றும் அடிமைத்தளையை நீக்குவதற்காகவே தமிழரசுக்கட்சி போராடிவருகிறது. நாம் அனைவரும் ஒற்றுமையுடன் ஒரே கொடியின்கீழ் இயங்குவோமானுல் போராட்டத்தில் மிக விரைவில் வெற்றி கிட்டிவிடும். எம்மிடையே ஒற்றுமை இன்றேல் எமது போராட்டம் நீடித்துக் கொண்டேபோகும்'' என்று பண்டிதர் இரத்தினம் கூறினார்.

திருவாளர்கள் க. திருநாவுக்கரசு, ஆ. மார்க்கண்டு, செ. புதக்கும்பி, வே. இரா

கோயில் திருட்டு:

மகாநாடு

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணப் பகுதியில் சென்ற சில மாதங்களாக சைவக் கோயில்களில் நடைபெற்றுவரும் திருட்டுக்களின் மூல காரணங்களைப் பற்றி ஆராயவும் இத்திருட்டுக்களைந் தடுக்க தொண்டர் சபைகளை நியமிக்கவும் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதுபற்றி ஆராயவும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சைவ ஆலயங்களின் பரிபாலகர்களைக் கொண்ட கூட்டமொன்று இரண்டொருவாரங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது. இந்தக் கூட்டத்தை நீர்வேலிக்கந்தசாமி கோயில் பரிபாலன சபைத் தலைவர் திரு. எம். பூபாலசிங்கம் கூட்டுகிருர்.

இன்றும் வரும்

யாழ்ப்பாணம், வியாழன்
நேற்று போயா நாளாக இருந்தும் காலை 7 00 மணியிலிருந்து மாலை 6 00 மணி வரை தேர்தல் அட்டைகள் கொடுக்கப்பட்டன. தேர்தல் அட்டைகள் கொடுத்து முடியாததினுல், இன்றும் தொடர்ந்து தேர்தல் அட்டைகள் விநியோகிக்கப்படும் என யாழ் தபாலதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

டெல்அவிவ், மே14
இஸ்ரேல் எகிப்திய பிரச்சனையை ஆராய்வதற்கு ஐ. நா சபை தகுதியற்றது என இஸ்ரேல் பிரதமமந்திரி திருமதி கோல்பியா மேயர்

COLL… 14 MAY … UNDERGRADU…

மாறுல், சிங்கள இணைந்து டன் இணைந்து செயல்படும் காங்கிரஸ் கட்சி பெரும் பலத்துடன் ஆட்சி மன்றம் செல்லவேண்டும்.''

சுன்னாகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய உடுவில் தொகுதி தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் திரு. என். சிவநேசன் மேற்கண்டவாறு கூறினார். திரு. சிதம்பரநாதன் தலை

வேண்டும் என்று சட்டமூலம் கூறுவதை நாம் எப்படி ஏற்றுக் கொள்வது? இப்பிரச்னை தீரவேண்டுமென்றால் இந்து மக்கள் தலைவர்கள் ஒன்று கூடி ஒற்றுமையாகப்பேசி சுமுகமாகத் தீர்க்கவேண்டும் பலாத்கார வழியிலோ, சட்டமூலமோ சாதிப் பிரச்னை தீர்க்கபடமாட்டாது.

வர்த்தகமானியில் வெளி வந்துள்ளதைத் தொடர்ந்து அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் மேற்படி முடிவு திகதியைப் பின்போடுமாறு கல்வியமைச்சை வேண்டியுள்ளது.

1969 மார்கழியில் நடை க. பொ. த. (சாதாரண) பரீட்சை முடிவுகள் இதுவரை வெளிவராததாலேயே முடிவு திகதியை பின்போடுமாறு கோரப்பட்டுள்ளது.

தேர்தல் காலங்களில் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படுவதற்கு வடபகுதியில் கள்ளுக் கொட்டில்கள் நள்ளிரவுவரை திறந்திருப்பதும் ஒரு காரணமெனக் கருதி இம்மாதம் 20-ந்தேதி முதல் 28ம் திகதிவரை மாலை 6 மணியுடன் கள்ளுக் கொட்டில்களைப் பூட்டிவிட வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கும் கலால் கமிஷனருக்கும் வடபகுதிப் பொலிசார் செய்திருந்த சிபார்சை ஏற்றுக்கொண்ட யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் இது சம்பந்தமாக ஒரு முடிவைச் செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு உள்நாட்டமைச்சரிடம் அரசாங்க அதிபரின் சிபார்சைச் சமர்ப்பித்திருக்கிறார்.

இவ்வாறுசரவணைநாகேஸ்வரி வித்தியாலயத்திற்கருகேயுள்ள மைதானத்தில் [illegible] நடத்தப்பட்ட தமிழரசுக் கட்சிப்பிரசாரக்கூட்டத்தின் போது முன்னைநாள் கிளிநொச்சிப் பிரதிநிதியும் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளருமாகிய பண்டி

ஒற்றுமை இன்றேல் எமது போராட்டம் நீடித்துக் கொண்டே போகும்'' என்று பண்டிதர் இரத்தினம் கூறினார்.

திருவாளர்கள் க. திருநாவுக்கரசு, ஆ. மார்க்கண்டு, செ. பூதத்தம்பி, வே. இராசையா, வை. குருமூர்த்தி உட்படப்பலர் பேசினர்.

தெரிவித்தார்.

டெல்அவிவ், மே14

இஸ்ரேல் எகிப்திய பிரச்சனையை ஆராய்வதற்கு ஐ. நா சபை தகுதியற்றது என இஸ்ரேல் பிரதமமந்திரி திருமதி கோல்பியா மேயர் இன்று டெல்அவிவில் தெரிவித்தார்,

ஐ.நா சபையில் எதுவித நம்பிக்கையும் பெறத்தாம் தயராய் இல்லை என அவர் கூறியுள்ளார்.

இனிவரும் தேர்தல்களில் சேவல் சின்னம் இல்லை!

யாழ்ப்பாணம், வியாழன்

இந்தப் பொதுத் தேர்தல் முடிந்தபின் அடுத்து வரும் தேர்தல்களுக்கு சேவல் அபேட்சகர்களின் சின்னமாகக்கொடுக்கப்படமாட்டாது.

முருகக்கடவுளின் கொடியில் இடம்பெறும் சேவல் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்குச் சின்னமாக வழங்கப்பட்டிருப்பது சைவ சமயத்தவர்களின் மனதைப் புண்படுத்துவதாக இருப்பதாக நீர்வேலி கந்தசுவாமிகோவில் பரிபாலன சபைத் தலைவர் திரு. எம். பூபாலசிங்கம் ஜே. பி. கவர்னர் ஜெனரலுக்கும் தேர்தல் கமிஷனருக்கும் புகார் செய்துமகஜர்ஒன்றைஅனுப்பியிருந்தார். இதற்குப்பதிலளிந்து தேர்தல் கமிஷனர் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்தத்தேர்தலில் சேவல் ஒரு சின்னமாக ஒதுக்கப்பட்டுவிட்டதற்கு வருத்தம் தெரிவித்திருப்பதுடன் அடுத்துவரும் தேர்தல்களில் சேவல் ஒருசின்னமாக ஒதுக்கப்படமாட்டாதென்றும் சின்னங்களின்பட்டியலிலிருந்து சேவல் நீக்கப்பட்டுவிடுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

தியாகராஜர் கிருதிகள்

சென்னை, மே 13

தியாகராஜ சுவாமிகளின் அரிய கிருதிகள், சாகித்தியங்கள் அடங்கிய ஒரு சிறப்பு மலர் இன்று வெளியிடப்பட்டது.

திருவையாற்றில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் இந்தச் சிறப்பு மலர் ஐ. நா. அதிகாரி திரு. வி. நரசிம்மன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கார்கள் முன்னேற்பாடு

வடபகுதியிலுள்ள ஏ 40 மோட்டார் கார்கள் பலவும் சிலகட்சிகளையும் சில அபேட்சகர்களையும் சேர்ந்தவர்களால் தேர்தல் வாக்களிப்புத் தினத்தில் உபயோகப்படுத்துவதற்காக இப்பொழுதே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிசாரின் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

மோட்டார் கார்களில் வாக்காளர்களை ஏற்றி இறக்குவது கண்டு பிடிக்கப்பட்டால் கார்கள் தடுத்து வைக்கப்படுவதுடன் பின்னர் மாவட்ட நீதிமன்றத்தில் கார் சொந்தக்காரர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு அந்தக்கார்கள் பறிமுதல் செய்யப்படுமென்றும் பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்,

'கூப்பன்களை பெற்றுக்கொள்க'

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு விவசாயப்படை முகாமில் வேலைசெய்துவிட்டு தற்போது வீட்டில் இருக்கும் விவசாயப்படை வீரர்களை உடனடியாகதங்கள் கூப்பன்களை வந்து பெற்றுக் கொள்ளும்படி முகாம் பொறுப்பதிகாரி திரு. நா, விஸ்வநாதன் அறிவித்தல் விடுத்துள்ளார்.

திருட்டு

மாவிட்டபுரம், புதன்

வீட்டுக்குமுன்னின்ற சைக்கிளைக் காணவில்லையாம் கட்டுவனைச்சேர்ந்த ஆசிரியரான வினாசித்தம்பி முருகேர்சு என்பவர் தமது சைக்கிளை வீட்டுக்கு முன் வைத்துவிட்டு நித்திரையால் எழுந்து பார்த்த போது சைக்கிளைக் காணாதையடுத்து காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

அடைவு நகைகள்
பகிரங்க
ஏல விற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி நெல்லியடி கிளையின் 1-1-69க்கு முன்பு அடைவு வைத்து மீட்கப்படாது இருக்கும் நகைகள் 31-5-70 ஞாயிற்றுக்கிழமைகாலை 10 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் நெல்லியடி கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

முகாமையாளர்,
யாழ். கூட்டுறவு
மாகாண வங்கி,
நெல்லியடிக் கிளை.
2251

''தனிச்சிங்களச்சட்டத்துக்கு தமிழரசாரே காரணம்''

ஜி. ஜி. சொல்கிறார்

மட்டுவில், புதன்

இலங்கையில் தனிச் சிங்களச்சட்டம் வருவதற்கு தமிழரசுக் கட்சியினரே காரணமாக இருந்தார்கள்

இவ்வாறு கல்வயல் கூட்டுறவு சங்கக்கடைக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட மைதானத்தில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் அரசியல் பிரசாரக் கூட்டத்தில் சாவகச்சேரி தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் திரு. வே. குமாரசாமியை ஆதரித்து பேசிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாண எம். பி.யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

தி. வை. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசியதாவது:-

' அன்று பிரதமராக இருந்த காலம் சென்ற திரு. எஸ். டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயக்கா, இவர்களுடன் ஒப்பந்தம் செய்தபொழுது இவர்களே தனிச் சிங்களத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர் இப்படி இருக்கும் பொழுது ஏதோ தமிழ் மொழிக்ககான அதன் உரிமையைப் பெறுவதற்காக அடி பட்டோம், உதை பட்டோம், சிறை சென்றோம் என்று கூறித்திரிகிறார்கள்.

இன்று சிங்களவரின் மத்தியில் மதிப்பும் கண்ணியமும் பெற்ற ஒரு கட்சிஇருக்கிறதென்றால் அது தமிழ் காங்கிரஸ் கட்சிதான் இந்த சக்திவாய்ந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி ஒன்றிற்கே சிங்களக் கட்சிகளை ஆட்சி மன்றத்தின் உள்ளும் புறமும் எதிர்க்கும் சக்தியும் உண்டு.

இன்று தமிழினத்திற்காகப் பாடுபடுகிறதாகக்கூறும் இந்தந் சமஷ்டிக்கட்சியினர் கடந்த பதின்நான்கு ஆண்டுகளாக தமிழினதிற்குப் பெற்றுத்தந்த உரிமைகள் என்ன? வீணாக வகுப்புவாதத்தைக் கிளப்பி சிங்கள மக்களின் வெறுப்புணர்ச்சியை மட்டுமேபெற்றுள்ளனர்.

இதையடுத்து தமிழினத்தை எதிர்பார்த்திருப்பது அவர்களின் கல்வி விஷயம் எனவே எமது எதிர் காலச் சிறார்கள் நல்ல கல்வி பெற்று முன்னேற பலகலைக் கழகம், யாழ்ப்பாணத்தில் தான் அமைய வேண்டும். திருக்கோணமலையில் அமைவதால் இப்பகுதி இளைஞர்களுக்கு பெரிதும் ஆபத்து. எனவே யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வேண்டுமா திருக்கோணமலையில் வேண்டுமா? யாழ்ப்பாணத்தில் வேண்டுமென்றால் தமிழ் காங்கிரசை ஆதரியுங்கள் என்றார்.

சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு. கே, குமாரசாமி பேசுகையில் கூறியதாவது:-

''உண்மைககு என்றும் அழிவே கிடையாது நான வடக்கே மகாவலி கங்கையைத் திருப்பமுடியும் அதனால் வடபகுதி மக்கள் நல்ல செழிப்பான வாழ்வைப் பெற முடியும் என்று கூறி வந்தேன், அதை எதிர்த்தவர்களே இன்று பூரணமாக ஒத்துக் கொண்டனர். இதிலிருந்தே எமது தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு அமோக வெற்றி என்பது உறுதியாகிறது என்றார்.

அடுத்து வழக்கறிஞர் சிவசிறீதரன், திரு. சிவப்பிரகாசம் உட்படபலர் உரை நிகழ்த்தினர்.

மலேசியாவில் மீண்டும் இனக்கலவரம்

கோலாலம்பூர், மே, 14

மலேசியாவில் மீண்டும் இனக்கலவரம் தலைதூக்கியுள்ளது. நேற்று இங்கு பலவன் செயல்கள் இடம் பெற்றன. இதில் பல சீனர்கள் கொல்லப்பட்டதாகஅறிவிக்கப்பட்டது

கடந்த ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற இரத்தக் களரிகளின் பின்னர் இது இப்போது நடைபெற்றுள்ளது. கோலாலம்பூரில் அமைதி நிலவுசிறது. நாடு பூராவும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

19-வது இலவச வெளியீடு

யாழ்ப்பாணம், வியாழன்

''கடவுட்பக்தி, வழிபாடு, பிரார்த்தனைகளின் மகத்துவமும் அவசியத் தன்மையும்'' என்ற சிறு நூல் மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தாரின் 19-வது வெளியீடாக வெளி வந்துள்ளது முன்னைய 18 வெளியீடுகளைப் போன்றே இந்நூலும் யாவருக்கும் இலவசமாகக் கிடைக்கும்.

மர்ம மரணம்

யாழ்ப்பாணம் வியாழன்

பூநகரி பகுதியில் நேற்று முன்தினம் மர்மமான முறையில் ஒருவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இச்சம்பவம்பற்றி விசாரணை செய்வதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து பொலிஸ் கோஷ்டி ஒன்று நேற்று பூநகரிக்கு விரைந்துள்ளது. இவரது பெயர் செல்லையா சிதம்பரராசா எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிங்களக் குடியேற்றத்தை நாம் எதிர்ப்பதால்

'சிங்களக் கட்சிகள் எம்மை எதிர்க்கின்றன'

—செ. இராசதுரை

உடுப்பிட்டி, திங்கள்

''மட்டக்களப்பு-யாழ்ப்பாண மக்கள் ஒருபோதும் இணைய மாட்டார்கள் என்றிருந்த நிலையைமாற்றி அவர்களை இந்து, கிறீஸ்தவா, முஸ்லிம் என்ற பேதம் இல்லாமல் ஒரே அணியில் திரட்டி ஒன்று சேர்த்த பெருமை தமிழரசுக்கட்சிக்கே உரியது.''

உடுப்பிட்டித் தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளராகப்போட்டியிடும் திரு. கே. ஜெயக்கொடியை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் திரு. இராசதுரை மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டம் கரணவாய் தெற்கு சோளங்கன் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் திரு. கி. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது திரு. இராஜதுரை தொடர்ந்து பேசுகையில்குறிப்பிட்டதாவது:

''தமிழரசுக்கட்சிஎன்னும் குடும்பத்தில் பண்பாடு நிலைத்து நிற்கின்றது. இப்பொதுத்தேர்தலில் கடந்த காலங்களைவிட அதிக பொய்ப் பிரசாரங்களை மாற்றுக்கட்சியினர். தமிழரசுக்கட்சி மீது பரப்பிவருகின்றனர். ஏழரை லட்சம் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்கள் தமிழ்க்காங்கிரஸ் தம்மை மறந்துவிட்டதை உணர்கின்றனர்.

1965-ம் ஆண்டு தேர்தல் முடிந்ததும் டட்லி எம்மைக் காத்துநின்றார். ஸ்ரீமாவும் ஒருபக்கம் எமது ஆதரவுக்காகக்காத்துநின்றார். இரு பிரதானசிங்களக்கட்சிகளும் அரசாங்கம் அமைப்பதற்காகத் தமிழரசுக்கட்சியின் ஆதரவைப் பெறுவதற்காக எம்மிடம் தண்டனிட்டன. தமிழரசுக்கட்சியின் ஆதரவைப்பெற்றால்தான் மகாதேசாதிபதி அரசாங்கம் அமைக்கத்தம்மை அழைப்பார் என இரு கட்சிகளும் உணர்ந்து இருந்தன.

தமிழ்மொழிக்கு உரிமை, வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கப் பொறுப்பில் நடைபெறும் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்கவேண்டும், மாவட்ட சபைகளோ அல்லது பிரதேச சபைகளோ அமைக்கவேண்டும் என்றும் தலைவர் திரு. செல்வநாயகம் விடுத்த நிபந்தனைகளை டட்லி ஏற்று ஒப்பந்தம் செய்ததினாலேயே நாம் டட்லிக்கு ஆதரவு கொடுத்தோம். டட்லி-செல்வா ஒப்பந்தம் பற்றிப் பேசத்தமிழ்க் காங்கிரசை டட்லி அழைக்கவே இல்லை தமிழரசுக்கட்சி மீது சிங்கள அரயசில் கட்சிகளும் தலைவர்களும் பெரும் மதிப்புவைத்து உள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ்பேசும் மக்களின் அன்புக்குப் பாத்திரமான ஏகோபித்த ஆதரவுபெற்றது தமிழரசுக்கட்சி.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மைப் பிரதேசத்தில் நம்மைச் சிறுபான்மையினராகக்கிவிடும் சிங்களக்குடியேற்றத்தை நாம் கடுமையாக எதிர்ப்பதால் சிங்களக் கட்சிகளும் எம்மை எதிர்க்கின்றன. தமிழ். மொழி மசோதா நிறைவேற நாமே காரணம்,

பண்டா - செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம்தமிழர்களின் சுபீட்சத்திற்கான 1-வது அத்திரவாக்கல்லை நாட்டினார். திரு. செல்வநாயகம், அந்த ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆட்சிமொழியாக உத்தியோக மொழியாகத் தமிழ் ஒப்புக்கொள்ளப்பட்டு இருந்தது''

உடுப்பிட்டித் தமிழரசு வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடி பேசுகையில், ''அரசியலில் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு இருப்பது அவசியம் இதனை மாற்றுக் கட்சியினர்உணரவேண்டும். திரு. சிவசிதம்பரம்தமிழரசு கட்சியோடு இணைந்திருந்த காலம் தவிரப்பின்னர் தமிழ் உரிமைக்காகப்பாடுபடவில்லை. ஒரு வேட்பாளரை ஆதரிக்கவும், எதிர்க்கவும் ஜனநாயக உரிமை உண்டு, என்றுகுறிப்பிட்டார்.

அடைவு நகைகள்
பகிரங்க
ஏல விற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி சுன்னாகம் கிளையில் 1-1-69க்கு முன்பு அடைவு வைத்து மீட்கப்படாது இருக்கும் நகைகள் 3-6-70 புதன் கிழமை பிற்பகல் 1-00 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கியின் சுன்னாகம் கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

முகாமையாளர்,
யாழ். கூட்டுறவு
மாகாண வங்கி,
சுன்னாகம் கிளை.
2250

வேட்பாளர் அறிமுகம்

கிளிநொச்சித் தொகுதி

மு. ஆலாலசுந்தரம்
(தமிழரசுக்கட்சி)

தமிழரசு மேடைகளில் இனிமையான பேச்சுகளைப் பேசி வரும் திரு. ஆலாலசுந்தரம் அவர்கள் இப்போதுதான் முதன் முதலாக ஆட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஆலாலசுந்தரம் நண்பர்களுடன் பழகும் இனிய சுபாவம் உடையவர் தர்க்க ரீதியில் இலக்கியம், அரசியல், கலை, ஆதியன பற்றியெல்லாம் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர்.

தமது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரியிலும் பெற்றவர்.

சென்னை மாநிலக்கல்லூரியில் கலைப்பட்டதாரியான பின்னர் சட்டக்கல்லூரியில் பயின்று இப்போது நியாயவாதியாகப் பணி புரிகின்றார்.

நாடகங்களை சுயமாக எழுதும் ஆற்றலுள்ள நாடக கர்த்தாவாகவும் இவர் விளங்குகிறார். நல்ல முறையில் நடிக்கக்கூடிய ஆற்றலுமுடையவர்.

இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் முதற் பரிசைப் பெற்ற 'கலையின் பரிசு' என்ற நாடகசிருட்டி கருத்தாவும் இவரே. அந் நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்துப் பலரது பாராட்டுதலையும் பெற்றிருக்கின்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிறந்த தொழிற் சங்கவாதி இவர். தமிழ்ப் பகுதியில் மிகப் பெரிய தமிழ்த் தொழிலாளர் கழகமான இலங்கை பஸ் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்காரியதரிசியாக பதவி வகிக்கின்றார்.

0 0 0

வி. ஆனந்தசங்கரி
(தமிழ்க்காங்கிரஸ்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ஆனந்தசங்கரி முன்னர் இடதுசாரி இயக்கங்களில் பங்குகொண்டிருந்தவர்.

எல்லோரிடமும் சகஜமாகப் பழகும் இயல்புடை இவர் கலை, கலாசாரத் தொடர்புடையவராகவும் உள்ளார். பலரையும் நண்பராக மதிக்கும் திரு. ஆனந்தசங்கரி முன்னாள் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியின் அதிபராகவிருந்த திரு. வீரசிங்கம் அவர்களின் மைந்தராவர்.

அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி, கொழும்பு சாகிருக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி என்பவற்றிலும் பயின்றவர்.

பத்து ஆண்டு காலம் ஆசிரியப் பணி புரிந்துள்ள இவர் அப்பதவியைத் துறந்து சட்டக் கல்லூரியிற் பயின்று இப்போது வழக்கறிஞராகப் பணிபுரிகின்றார்.

இவர் இலங்கைச் சமசமஜக்கட்சியில் அங்கத்தவராக இருந்தகாலத்தில்கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் கொட்டாஞ்சேனை வட்டாரத்தில் போட்டியிட்டார்.

1960, 1965 ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட்டுள்ளார்.

1965-ம் ஆண்டில் இனத்துவேஷத்தை இலங்கை சமசமாஜக்கட்சி கிளப்பியதன் காரணமாகவே கட்சியிலிருந்து விலகியவர்.

தமிழ்க்காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த இவர் அதன் வாலிப முன்னணியின் பொதுச் செயலாளராக விளங்குகிறார்.

2965-ல் கராச்சிக் கிராம சபையின் தலைவராகவும் 1968-ம் ஆண்டு கிளிநொச்சி பட்டினசபையின் தலைவராகவுமிருந்து மேற்படி தொகுதிகளின் மக்களுக்கு அயராது தொண்டுசெய்து வருகின்றார்.

0 0 0

அ. சிவசுந்தரம்
(சுயேச்சை)

'இந்த நாட்டில் வசதியற்றுப் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களின் குறையை தீர்க்கவே பாராளுமன்றம் போக எண்ணினேன்' என்று தெரிவிக்கும் திரு. சிவசுந்தரம்அவர்கள்கிளிநொச்சித் தொகுதியில் ஏற்கனவே ஆட்சிமன்ற உறுப்பினராக இருந்தவர்.

முப்பத்தைந்து ஆண்டு காலமாக நீர்ப் சாசனப் பகுதியின் பொறியியல் நிபுணராகக் கடமை செய்த இவர் கிளிநொச்சி போன்ற விவசாயப் பகுதியின் குறை நிறைகளைப் புரிந்து கொண்ட ஒருவராவர்.

இரணைமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினதும் தென் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினதும் தலைவராக இருக்கின்றார்.

முன்னாள் பாராளுமன்ற

பெற்றுக்கற்றவர் இவர் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப்பட்டம் பெற்றார். கொழும்பு லோறன்ஸ் கல்லூரியிலும் தலவாக்கொல்லை அர்ச்சம் பத்திரிசியார் பாடசாலையிலும் முன்னர் ஆசிரியராகக் கடமையாற்றியவர். கல்கத்தா பல்கலைக்கழகம் பம்பாய் பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் மாணவர் சங்கங்களின் செயலாளராகப் பணிபுரிந்திருக்கிறார். தீவிரமான போக்குடையவர். படிக்கும் காலந்தொட்டு இன்றுவரை மக்கள் பணி புரிவதில்நாட்டமுடையவர்.

தொழிலாளர் நலனில் அக்கறையுடையவர். சோஷலிஸமே நாட்டின் அபிவிருத்தியை மேலோங்கச்செய்யுமென்ற நம்பிக்கையுடையவர். இலங்கைச் சமசமாஜக் கட்சியின் சார்பில் முதன்முதலாக கிளிநொச்சி தொகுதியில் போட்டியிடுகின்றார்.

0 0 0

க. ஆ. ஜெரோம்
(சுயேச்சை)

சுயேச்சையாகப் போட்டியிடும் திரு. ஜெரோம் நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

நாவற்குளி மிஷன் பாடசாலையிலும், யாழ்ப்பாணம் சென்பற்றிஸ் கல்லூரியிலும் பயிற்சி பெற்றவர்.

சிலவாண்டுகளாக சினிமா இயந்திர இயக்குநகராக வேலை செய்த இவர் தற்போது வானொலிப்பொறியியலில் பயிற்சியும் பட்டமும் பெற்று றேடியோ திருத்தும் தாபனம் ஒன்றை நடத்தி வருகிறார்.

சமுகப்பணிகளில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளும் இயல்புடையர். முதற் தடவையாக இப்போதுதான் கிளிநொச்சித் தேர்தலில் போட்டியிடுகிறார்.

வரி விளம்பரம்

தேவை

எமது நிலையத்தில் வேலை நேரங்களில் வந்து தையல் பயில விரும்பும் பெண்கள் விண்ணப்பிக்கவும். நெசவு பயில விரும்பும் பெண்கள் நேரில் தொடர்பு கொள்ளலாம். வேலணை வீவிங் இன்டஸ்றீஸ், வேலணை- 1.

2226

விற்பனைக்கு

வீடு வளவு:

சுண்டிக்குளியில் கச்சேரி கல்லூரிகளுக்கு அண்மையில் உடனடியாக குடி வரக் கூடிய காலியானதும், 3 படுக்கை அறைகள், கறேச் வசதிகளுடன் கூடியதுமான 3 பரப்பு காணியுள் அடங்கிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். எஸ். இராசரெத்தினம், C/o சுந்தரம் பிறதர்ஸ், 73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

2121

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
ஷம்மிகபூர்
ராஜ்ஸ்ரீ
நடித்த
பிரமச்சாரி

‘மலையகமக்களுக்கு துரோகம் செய்தது தமிழரசா, காங்கிரஸா’’

வல்வெட்டித்துறை, புதன்

''1948-ம் ஆண்டுதொடக்கம் நானும், நமது கட்சியான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும் கூறிவந்த கொள்கையை 22 ஆண்டுகளின் பின்னர் இன்றுதான் சமஷ்டிக் கட்சியினர் அறிந்திருக்கின்றனர். எப்பொழுதும் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வதன் மூலம் பெரும்பான்மை மக்கள் அனுபவித்து வரும் சகல உரிமைகளையும் பெற்று இலங்கை முழுவதும் நமது நாடு என்ற நிலையில் தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழவேண்டும் என்பதே எமது கொள்கையாகும்''.

இவ்வாறு பருத்தித்துறைத் தொகுதி தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. என் நடராசாவை ஆதரித்து நடைபெற்ற பிரசரரக்கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ் தலைவரும், யாழ்ப்பாணம் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியு. சி. பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

உடுப்பிட்டிதொகுதி வேட்பாளர் திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் ''நாம் மலைநாட்டு தமிழ்மக்களுக்கு ஏதோ துரோகம் செய்து விட்டோம் என்று தமிழரசார் சொல்லிவருகின்றனர். அதே தமிழரசு வாதிகள் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் ஐந்தேகால் லட்சம் மாலைநாட்டு தமிழ் மக்களை கட்டாய நாடு—கடத்தலுக்கு ஆதரவு கொடுத்து தமிழ் மக்களுக்கு பெரும் துரோகிகளாக மாறிவிட்டனர். செல்வநாயகம் தனக்கு மந்திரிப்பதவி தரவில்லை என்ற காரணத்திற்காகத் தான் புதிய கட்சியை உருவாக்க முனைந்தாரே தவிர தமிழ் மக்களுக்கு தமிழ் காங்கிரஸ் துரோகம் செய்துவிட்டது என்ற காரணத்திற்காகவல்ல. யாழ் கச்சேரியில் இப்பொழுது சிங்களத்திலே தான் தஸ்தாவேஜுகள் நடைபெற்று வருகின்றன.

திருவாளர்கள்:- எஸ். நடராசா, ஏ. தியாகராசா, ஸ்ரீதரன், கே. மோதிலால் நேரு, பெரி சுந்தரலிங்கம், ந. கிருஸ்ணராசா வேறுசிலரும் பேசினர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 14—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம் 4-28 சங்கமம், 5 00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு6-10இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 செய்தித் திரட்டு, 8-00செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10 30 செய்திச்சுருக்கம்.

தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வ

லாம். நேரே கொடுக்க விரும்புவோர் ''ஈழநாடு'' அலுவலகத் தபால் பெட்டி

“கூட்டுறவு இயக்கததில் ஊழல் என்பதை ஏற்க முடியவில்லை’’

பண்டத்தரிப்பு மின்தறி நெசவாலை திறப்பு விழாவில் பேச்சு

சுழிபுரம், வியாழன்

''மக்களின் தேவையை நிறைவேற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுதான் கூட்டுறவு இயக்கம். நல்ல நிர்வாகமும் திறமையான தொழிலாளர்களும் இந்த மின்தறி நெசவாலையின் மூலம் அதிக பயனைப்பெறுவார்கள். அதேபோல் இப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் துணிகளை உற்பத்தி செய்ய வேண்டும். உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை மக்கள் ஆதரிக்க வேண்டும். அப்போதுதான் மின்தறி நெசவுநிலையம் நன்குசெயல்படும்.''

இவ்வாறு பண்டத்தரிப்புக் கோவிற்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மின்தறி நெசவு நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு டபிள்யூ பத்திரானு குறிப்பிட்டார். விழாவுக்கு சமாஜத் தலைவர் திரு மு. வைரமுத்து தலைமை வகித்தார். விழா ஆரம்பமாவதற்கு முன்னர் எம். கே பத்மநாதனின் நாதஸ்வர இசை நடைபெற்றது. நெசவாலை ஊழியரான செல்வி எஸ். செல்வநாயகி நிலையத்தைத் திறந்துவைத்தார்.

விழாவுக்குத் தலைமைவகித்த சமாசத் தலைவர் திரு மு, வைரமுத்து பேசுகையில் கூறியதாவது:

கூட்டுறவு இயக்கம் ஓர் ஊழல் நிறைந்ததெனப் பலர் பேசிக் கொள்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்து உழைக்க முன்வந்த நான் சிறந்த நிர்வாகத்தையும் பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர்களையும் இதனால் ஏற்படும் அதிகநன்மைகளையுமே காண்கின்றேன். தொழிலாளரின் அயராத பணியிலும் திறமையிலும் தான் வெற்றி தங்கியுள்ளது''

திருவாளர்கள் கே, எஸ். பொன்னுத்துரை ஆர், இராசரத்தினம், வீ. கனகசபை, ரி கே இராஜசேகரம், என்.ஜேம்ஸ் உட்படப் மற்றும்பலர் பேசினர்.

பிரஜாவுரிமை

விஸ்வமடு, புதன்

1948-ம் ஆண்டில் பிரஜா உரிமைச் சட்டத்தின் கீழ் உங்களை இலங்கைப்பிரஜைகளாக்குவதற்கு 'தமிழரசுக் கட்சி ஒன்றே பாடுபட்டது. ஆனால் தமிழ்காங்கிரஸ்கட்சி உங்கள் பிரஜா உரிமையை பறித்து நாடுகடத்துவதற்காக அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்தது இதைஎவராலும்மறுக்கவோ மறைக்கவோ முடியாது.'

இவ்வாறு தர்மபுரம் சந்தை மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது வழக்கறிஞர் மு. ஆலாலசுந்தரம் கூறினார். திரு ஆலாலசுந்தரத்தை ஆதரித்து இக்கூட்டம் திரு. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. திரு. மு. ஆலாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

உங்களில் மூன்று இலட்சம் பேருக்கு இலங்கை பிரஜைகளாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வெற்றியும் ஈட்டியுள்ளது. தமிழரசுக்கட்சி ஆனால் இலங்கையில் குடியிருப்பதற்கு உத்தரவாதம் பெறாத அத்தனை பேர்களும் இந்தியா செல்லத்தான் வேண்டும். இதைத்தடுத்து நிறுத்த எனக்கோ எனது கட்சிக்கோ அல்லதுவேறெருவருக்குமோ அதிகாரம் கிடையாது இதை நீங்கள் திடமாக நம்ப வேண்டும்.''

‘கூடியதொண்டு செய்துள்ளேன்’

அல்லைப்பிட்டி, புதன்

'கடந்த ஐந்துவருடகால எல்லைக்குள்நான் கிளிநொச்சித்தொகுதியின் ஆட்சிமன்ற உறுப்பினனாக இருந்த போது எனது தொகுதிக்கு மற்ற எந்தத்தொகுதிகளிலும் பார்க்க சிறப்பான தொண்டுகள் செய்துள்ளேன்' இவ்வாறு புங்குடுதீவு சிவலைப்பிட்டியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் பேசும்போது ஊர்காவற்றுறை தமிழ் அரசுக் கட்சிவேட்பாளர் கா.பொ. இரத்தினம் தெரிவித்தார்.

திரு. கணேசு தலைமையில் இக்கூட்டம் நடந்தது.

2121

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
ஷம்மிகபூர்
ராஜ்ஸ்ரீ
நடித்த
பிரமச்சாரி

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
6வது வாரம்
சிவாஜி, கே ஆர் விஜயா
நடித்த
திருடன்

வின்ஸர் 6 வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
யாழ்ப்பாணம் சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 92.வது தினம்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி.ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றும் பலர் நடித்த
தில்லானா மோகனாம்பாள்

வெற்றிகரமான 3வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்
இன்னும் பலர் நடித்த
பி. நாகிரெட்டி அளிக்கும்
நம் நாடு
(ஈஸ்ட்மென் கலர்

நிறைகளைப் புரிந்து கொண்ட ஒருவராவார்.

இரணைமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினதும் தென் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினதும் தலைவராக இருக்கின்றார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது இரணைதீவில் வைத்தியசாலை அமையவும் கிளிநொச்சி— இராமநாதபுரம் வீதி, மாங்குளம் — துணுக்காய் வீதி அமையவும் காரணர் தானே என்று தெரிவிக்கின்றார்.

"நம்பகுதிமக்களின் வாழ்வும் வளவும் உயரவேண்டும். இதுவே என் இலட்சியம்" என்று கூறும் இவர் கிளிநொச்சியின் நிரந்தர வாசியாவார்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் உத்தியோகப்பற்றற்ற ஆலோசக அதிகாரியாகவும் கடமையாற்றுகிறார்.

0 0 0

க. கனகரத்தினம்

(சமசமாஜக்கட்சி)

நெடுந்தீவினைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கனகரத்தினம் 36 வயதுடையவர் வேலணை மத்திய மாகாவித்தியாலயத்தில் 5 வயதிலிருந்து அரசாங்கஇலவசக் கல்வியைப்

இன்று மட்டும்
வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எம்.ஜி.ஆர்-சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா, பிரி போயா
4 காட்சிகள்
ஜீவனும்சம் லக்ஷ்மி-ராஜ்குமார்
நடித்த
கோவாவில்
சி. ஐ. டி. 999
(தமிழ்)

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m
Poya, Pre-poya 4 Shows
Burt Raynolds.
Nicoletta Machiaveli
in
NAVAJO JOE
(adults only)

1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி "தேர்தல் போட்டி - 1970" ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் "ஈழநாடு" அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

கேள்விகள்:

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு — கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எந்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள கமாஜனக் கட்சி, இ. தி,. க.மு கட்சி என்பன.

பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்

'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

1970 தேர்தல் போட்டிக் "கூப்பன்"

'ஈழநாடு'

இ. த. அ. கட்சி	
அ. இ. த. கா. கட்சி	
ஐ. தே. கட்சி	
கூ. கட்சி	
சுயேச்சை	

பெயர் : ....

விலாசம் : ....

....

ஸ்ரீதரன், கே. மோதிலால் நேரு, பெரி சுந்தரலிங்கம், ந. கிருஸ்ணராசா வேறுசிலரும் பேசினர்.

இராசரத்தினம், வீ. கனகசபை, ரி கே இராஜசேகரம், என்.ஜேம்ஸ் உட்படப் மற்றும்பலர் பேசினர்.

கட்சி வேட்பாளர் கா.பொ. இரத்தினம் தெரிவித்தார்.

திரு. கணேசு தலைமையில் இக்கூட்டம் நடந்தது.

வெங்காயம்
வெற்றிலை
உருளைக்கிழங்கு
மரக்கறி
கறுவா
கொச்சிக்காய்
புகையிலை
கொக்கோ
பவர்ஸ் பசளை

தேயிலை, ரப்பர், தென்னை, கோப்பி, புகையிலை, பழமரம், மரக்கறி, வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய், வெற்றிலை, அலங்காரச் செடிகள்—புதர்கள், இந்தச் சகல பயிர்களுக்கும் பாவிக்கச் சிறந்ததாக பல்வேறு ரகங்களில் கிடைக்கிறது பவர்ஸ் பசளை. (வீட்டுத் தோட்ட பசளை வகைகள்) சிறு அளவில் பயிர் செய்யும் நீங்கள் செலவு குறைந்த பவர்ஸ் உரங்களைப் பாவித்து, காய்த்துக் குலுங்கும் "தளதள" விளைச்சலையும் கொழுத்த இலாபத்தையும் அடையுங்கள்.

பவர்ஸ் பசளைகள், மண் ஆராய்ச்சி நிபுணர்களால் நவீன முறைப்படி சோதனை செய்யப்பட்டு கவனமாக தயாரிக்கப்பட்டவை.

செழிப்பான விளைச்சல் தருவதற்கு, மண்ணை வளம் கொழிக்கச் செய்வது பவர்ஸ் பசளை.

உங்கள் பயிர்களையும், செடி கொடிகளையும் பாதுகாக்க பவர்ஸ் பசளைகள்; பவர்ஸ் தாவர மருந்துகள்; பவர்ஸ் தெளி கருவிகள் (சிவிஜி).

இலவச ஆலோசனைகளுக்கும் முழு விபரங்களுக்கும் எழுதுக: பவர்ஸ் விவசாயச் சேவை. ஏ. பவர் அன் கம்பனி லிமிடெட், த. பெ. 11, கொழும்பு. தொலைபேசி: 20551 (6 வழிகள்)

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
சிலோன் மேர்ச்சன்ட்ஸ் லிமிடெட், றலே கட்டிடம், பெரியகடை.

1277

லெபனான் பிரதேசத்துக்குள் ஊடுருவி இஸ்ரேலியர் தாக்கினர்

கடும் மோதலில் இருதரப்புக்கும் பலத்தசேதம்

பேய்ரூட், மே 13

லெபனானுக்குள் புகுந்து நேற்று முழுநாளும் அரபுக் கொமாண்டோ நிலைகள்மீது பலத்த தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்த இஸ்ரேலிய படைகள் இன்று விலகிச் சென்றுகொண்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

லெபனானுக்குள் புகுந்த துருப்புக்களை உடனடியாக விலகிக்கொள்ளும்படி முன்னதாக ஐ நா, பாதுகாப்புச் சபை இஸ்ரேலியரை அவசர தீர்மானமொன்றின் மூலம் கேட்டுக்கொண்டது. லெபனான் புகாரைத் தொடர்ந்து ஐ நா பாதுகாப்புச் சபை விசேஷமாகக் கூடி ஆலோசனைகள் நடத்தியது.

லெபனானுக்குள் சென்ற தம் நாட்டுத் துருப்புகள் விலகிச் செல்வதாக இஸ்ரேலிய பிரதிநிதி சபையில் தெரிவித்தார்; என்றாலும் அவர்கள் விலகிச்செல்வதற்கான அறிகுறியே தென்படவில்லை யென்று லெபனான் பிரதிநிதி குற்றஞ்சாட்டியிருந்தார். கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி இஸ்ரேலிய படைகள் திரும்பிச் செல்வதாக அறியப்படுகின்றது.

இஸ்ரேலியரின் தாக்குதல் காரணமாக ஆறு லெபனான் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும், 13 பேர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. இஸ்ரேலிய துருப்புகளுக்குப் பலத்த சேதம் விளைவித்ததாக லெபனான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

லெபனான்மீது தாக்குதல் ஆரம்பித்த இஸ்ரேலிய விமானங்கள் மூன்றை சுட்டுத்தள்ளியதாக சிரியா அறிவித்தது. இந்தச் சண்டையில் குறுக்கிட்ட சிரியா விமானங்கள்மூன்றைத்தாம் சுட்டுத்தள்ளியதாகவும்இஸ்ரேலியர்கள் கூறினார்கள்.

நேற்று லெபனானுக்குள் இஸ்ரேலியர் புகுந்து பாலஸ்தீன கொமாண்டோ நிலைகள்மீது தாக்குதல் நடத்தியதாகவும் இந்தத் தாக்குதல்களின்போது 11 அரபுக் கொரில்லாக்களைச் சிறைப்பிடித்ததாகவும், 40 கட்டிடங்களை தரைமட்டமாக்கியதாகவும் இஸ்ரேலியர் கூறினார்கள், இஸ்ரேலிய நகர்கள்மீது அரபுக்கொரில்லாக்கள் நடத்திய தாக்குதல்களுக்கு எதிர்நடவடிக்கையாக இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாம். இஸ்ரேலிய ,படைகளுக்கும் லெபனான் படைகளுக்கும் நேரடி மோதல் ஏற்படவில்லையென்றும் பலத்த தாக்குதலொன்றும் இடம் பெறவில்லையென்றும் இஸ்ரேலியர் அறிவித்தனர்.

யுதாண்ட் அறிக்கை

இஸ்ரேல் — லெபனான் மோதல்பற்றி ஐ நா பாதுகாப்புச்சபை ஆலோசிக்க ஆரம்பித்தது. மேற்காஸிய நிலைமை குறித்து அறிக்கையொன்றைத் தாக்கல் செய்யும்படி அங்கத்தவர்கள் பொதுச்செயலாளர் யுதாண்டைக் கேட்டுக்கொண்டனர். மேற்காஸியாவிலுள்ள ஐ. நா. அதிகாரிகள் அனுப்பும் அறிக்கைகள் சபையின் அடுத்த கூட்டத்தில்சமர்ப்பிக்கப்படுமென்று யுதாண்ட் கூறியிருக்கிறார்.

"இடதுசாரிகள் ஆட்சியினால் ஜனநாயகம் அழிந்துவிடும்"

எஸ்.ஜே வி. எச்சரிக்கை

மல்லாகம், புதன்

'தமிழ் இனத்தின் பிரதேசம் மொழி, கலாச்சாரங்களை அழிக்க இந்த நாட்டின் சிங்கள அரசியல் கட்சிகள் போட்டி போட்டு இயங்கி வருகின்றன. தமிழ்ப்பகுதிகளில் சிங்களவரை குடியேற்றியும் தமிழ் குழந்தைகளுக்கு சிங்களத்தை போதனா மொழியாகப் புகுத்தியும் எமது பரம்பரையை அழிப்பதில் இவர்கள் முனைகின்றனர். இந்நடவடிக்கைகளை இது

அளவெட்டி வடக்கு சனசமூக நிலையத்திற்கு அருகில் ஞாயிறு இரவு நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. செல்வநாயகம் மேலும் பேசியதாவது: இடதுசாரிகள் தமிழர்களின் விரோதிகள் தமிழர் உரிமைகள் வழங்கப்படுவதற்கு மறுப்புத் தெரிவிப்பார்கள். இந்த நாட்டில் இடதுசாரிகள் பதவிக்குவந்தால் ஜனநாயகம்அழிந்துபோவதுடன் சர்வாதிகார ஆட்சி இடம் பெறும். துப்பாக்கிக்குண்டு வேட்டுக்கள் மக்கள்மீது பலாத்காரமாக பாவிக்கப்படும். எனவே இவ்வகை

'இந்த யானைக்கு இப்போது மதம் பிடித்து விட்டது''

பிரதமருக்கு 'ஹேமா' கிண்டல்!

மதவாச்சி, புதன்

'நான் இந்த யானையைக் கொண்டு நல்ல வேலை செய்ய முனைந்தேன். ஆனால் அந்தயானை செவிடாகி விட்டது. இப்போது இது மதயானையாகிவிட்டது.

இந்த மதயானையைக் காட்டுக்கு கலைத்துவிட்டு புதியதொரு அரசாங்கத்தையுருவாக்கவேண்டும்'

மதவாச்சியில் நடைபெற்ற சங்க சபா கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் நீதியரசர் திரு ஹேமா பஸநாயக்கா மேற்கண்டவாறு உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் பேசுகையில் மக்களுக்குத் தேவையான உணவை அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இதை விடுத்து அரசாங்கம் மக்களுக்கு வழங்கும் பங்கீட்டரிசியைக் குறைத்து விட்டது. இத்துடன் நில்லாது விவசாயிகள் சோம்பேறிகள் ஆகிவிடுவார்கள் என்பதற்காகவும் நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்யவுமே அரிசியைக் குறைத்ததாகவும் ஒருபொய்யை கூறியுள்ளது. நாடு சுயதேவையை பூர்த்திசெய்வதற்காக பங்கீட்டரிசியை ஒருபடியாகக் குறைக்க வேண்டியதில்லை.

ஜப்பான் முன்னர் தனது தேவைக்கு அரிசியை இறக்குமதி செய்தது. இப்போது சுயதேவையடைந்துள்ளது. ஆனால் சுயதேவையடைய வேண்டுமென்பதற்காக மக்களுக்கு வழங்கும் அரிசியைக் குறைக்கவில்லை' எனக் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய மைத்திரிபால சேனநாயக்கா ஐக்கியதேசியக் கட்சியினர் மரியாதையின்றி நடந்து கொண்டார்களானால் நாங்களும் பழிக்குப்பழி வாங்குவோம். அவர்கள் தசராஜதர்மத்தின்படி நாட்டை ஆளுவதாகக் குறிப்பிட்டார்கள் ஆனால் அதற்கு முரண்பாடாகவே நடந்து கொள்கிறார்கள் எனக் கூறினார்,

திருவாளர்கள் கே. ஏச். எம், சுமதிபாலா யு.பி.தசநாயகா திரு. எல். ஆர். பெரேரா உட்படப் பலர் பேசினர்.

''சிங்கள மக்களுடன்

மீண்டும் சமத்துவமாக வாழ்வதே எம் லட்சியம்''

உரும்பராய், புதன்

''தேர்தல் பிரசாரமேடைகளில் தமிழனை தமிழன் தூசிப்பது நல்லதல்ல. தமிழினத்தின் கட்சி வேறுபாடுகளால்தான் தமிழ்மக்கள் இரண்டாந்தரப்பிரஜைகளாக்கப்பட்டுள்ளார்கள். 1956-ம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் எப்படி தமிழன் அகில இலங்கையில் சிங்களவர்களுடன் நண்பர்களாகவும் சமத்துவத்துடனும் வாழ்ந்தானோ அதே

டத்தில் அவர் மேலும் பேசுகையில், எமது நாட்டுக்கு சமஷ்டிஅமைப்பு ஒத்துவராது. இதற்கு சிங்கள அன்பர்கள் எதிர்க்கிறார்கள். எனவே ஒற்றையாட்சியின் மூலம்தான் நாடு சுபீட்சமடைய முடியும், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கும் வேலையற்ற தமிழ் வாலிபர்களுக்கு தமிழ்ப் பிரதேசங்களில் கைத்தொழிற்சாலைகள் நிறுவி வேலையில்லாத் திண்டாட்டத்தை படிப்படியாக ஒழித்து கிராமங்களின் வாழ்க்கைத்தரங்களை உயர்வடையச் செய்யவும் கோப்பாய்த் தொகுதியில் உள்ள வளர்ச்சியில்லாத கைத்தொழில் கமத்தொழில்

''60-ம்ஆண்டில் தமிழரசு ஆதரவு இல்லாததால் யு.என்.பி ஆட்சி வீழ்ந்தது'

65-ல் எமது உதவியால் அரசு அமைத்தனர்

—திரு. இராசதுரை

வல்வெட்டித்துறை, புதன்

1960ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு அரசு அமைக்க சந்தர்ப்பம் ஏற்பட்ட நேரத்தில் தமிழ் மக்களின் கோரிக்கைகளான தமிழ்மொழி மசோதா, மாவட்டசபை, வடகிழக்கு குடியேற்றம் ஆகிய திட்டங்களுக்கு சம்மதம் அளித்தால் அரசாங்கம் அமைக்க ஆதரவு தருவோம் என தமிழரசுக்கட்சி கூறியது. அதை மறுத்த ஐ தே கட்சி அரசாங்கத்தை அமைத்தது. அப்படியாக அர சாங்கம் அமைத்து இரண்டு மாத காலத்திற்குள் ஆட்சி செலுத்த முடியாதபடி அவ்வரசாங்கத்தை தமிழரசுக் கட்சியினர் வீழ்த்தினர். அதே ஐ தே கட்சியினர் தான் 1965ம் ஆண்டு கொள்கையை மாற்றி எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பதாகக் கூறி எமது ஒத்துழைப்புடன் அரசாங்கத்தை அமைத்தனர்.

இவ்வாறு தமிழரசுக் கட்சிப் பிரமுகர் திரு செ இராசதுரை வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிடும் திரு க துரைரத்தினத்தை ஆதரித்துப் பேசுகையில் கூறினார்.

சமாதான நீதிபதி திரு. ச ஞானமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு இராசதுரை தொடர்ந்து கூறியதாவது

வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான கட்சி தமிழரசுக் கட்சி என உணர்ந்த சிங்களக் கட்சிகளான ஐ தே.கட்சியோ அன்றி சிறீலங்கா சுதந்திரக் கடசியோ எமது உதவியை அன்றும்,இன்றும் நாடிவந்திருக்கின்றன. அதே நேரத்தில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரிடம் அவர்கள் போகவில்லை. தமிழ்க்காங்கிரஸ் கடசியினர் கிழக்கு மாகாணத்தையும், மன்னாரையும் புறக்கணித்து விட்டனர்.

உரிமைக்காகப் போராடி வரும் கட்சி நமது கட்சி. 1965ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்தை முறியடித்த பெருமை தமிழரசுக் கட்சியையே சாரும் என சிங்களத்தலைவர் கூட பல சமயங்களிலும், பல இடங்களிலும் கூறி வருகின்றனர்'

'லண்டன் பத்திரிகை கூறியுள்ளது'

பருத்தித்துறைத்தொகுதி

சொல்லி வைக்க விரும்புகிறேன். வருங்காலத்தில் எந்தக் கட்சியாவது எங்கள் உதவியில்லாமல் அரசாங்கம் அமைக்கமாட்டாது என்று லண்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றே எடுத்துக் காட்டியுள்ளது. இராணுவத்தை பொறுத்தவரையில அரசியல், சமூக, சூழ்நிலையில் தமிழ் பகுதிகளிலிருந்து வெளியேற்றுவது தற்பொழுது பெரிய கஷ்டமாகும்.

'சிங்களச் சொற்களை புகுத்திவிட்டனர்

திரு, அந்தனிசில் பேசுகையில், அன்று தொட்டு இன்று வரை தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன. அந்நியர் ஆட்சியிலிருந்து கதிரை. மேசை, அலுமாரி போன்ற சொற்கள் தமிழ்மக்களின் வாயில் அடிபடுகிறதுபோல சிங்கள ஆட்சியினர் சியவச. சலுசல ஜாதிக சம்பத போன்ற சொற்களைத் தமிழ் மக்களிடையே புகுத்திவிட்டனர். யு என் பி ஆட்சியாளர் தமிழ் பிரதேசங்களை நாளுக்கு நாள் பிடித்துக்கொண்டு வந்ததை தமிழரசுக்கட்சியினர் தடுத்துநிறுத்தினர். தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு தமிழரசுக்கட்சியை ஒ மித்து அனுப்பி வைக்கவேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

திருவாளர்கள் செ வேலுப்பிள்ளை உபதலைவர் கி. சபை செம்பியன்பற்று, சி கணேசன், வே சின்னப்பு, ந நகுலசிகாமணி மற்றும் சிலரும் பேசினர்.

''தமிழரசுடன் ஒப்பந்தம் செய்ய தயாராய் இருந்தன''

மல்லாகம், புதன்

'இந்த நாட்டில் தமிழ் பேசும் இனத்தின் ஏகப் பிரதிநிதித்துவம் வாய்ந்த கட்சியாக தமிழரசுக் கட்சியை தமிழ் மக்கள் ஏற்றுள்ளனர். இந்த உண்மையை விளங்கியதால் தான் சிங்கள மக்களின் இரு பெரும் கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், யூ.என் பி. யும் 1956, 1960, 1965-ம் ஆண்டுகளில் சமஷ்டிக் கட்சியுடன் அரசியல் ஒப்பந்தம் எழுத முன் வந்திருந்தன''

இவ்வாறு மட்டக்களப்பு முன்னாள் எம். பி. திரு. செ. இராசதுரை மல்லாகம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்பெற்ற தேர்தல்பிரசாரக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். திரு. முருகேசு தலைமையில் உடுவில் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. வீ. தருமலிங்கத்தை ஆதரித்து இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. இராசதுரை மேலும் கூறியதாவது: 1956-ம் ஆண்டு தனிச் சிங்கள மசோதா பாராளுமன்றத்தில் தமிழ் மொழியின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு நமது கட்சிக்கு இருந்தது. இந் நேரத்தில் உயர்ந்த நிலையில் பொறுப்புடன் கடமையாற்ற வேண்டியவர்களாக நாம் இருந்தோம். காலஞ்சென்ற பண்டாரநாயகா சிங்களச் சட்டத்தை கொண்டு வந்த பின்னர் லண்டன் சென்றிருந்த போது இலங்கையில் மொழிப் பிரச்னைக்குத்தீர்வு காணப்பட்டு விட்டதாக பெருமையுடன் அங்கு தெரிவித்தார். ஆனால் இலங்கை திரும்பியதும் 1957-ல் செல்வாவுடன் ஒப்பந்தம் எழுதி பதவியைக் காக்க வேண்டிய நிலை பண்டாராவுக்கு ஏற்பட்டது இந்த நிலைக்கு தமிழரசுக் கட்சியே காரணமாகும்.''

''சுதந்திரம் நிச்சயம்கிடைக்கும்''

மாவிட்டபுரம், புதன்

ஐந்தரைலட்சம் மக்கள் கொண்ட பிஜிதீவு உட்பட சில லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட நாடுகள் பல சுதந்திரம் பெற்றுள்ளன. அதேபோல 35 லட்சம் தமிழர் இலங்கையில் சுதந்திரம்பெற்று கட்டாயம் ஒரு காலத்தில் வாழ்வோம்' என காங்கேசன்துறைத் தொகுதியில்போட்

லட்சம்மக்கள்எல்லாம்இலங்கையின் தேர்தல்முடிவை எதிர்பார்த்தவண்ணமேயிருக்கின்றனர். ஏனெனில்இந்தத் தேர்தல் முடிவில்தான், இலங்கையில் தமிழ் இனம் அரசியல் உரிமை பெறமுடியுமா அல்லது முடியாதா என்பது நிர்ணயிக்கப்படவிருக்கிறது' என திரு.இராசதுரை சொன்னார்.

கிழக்கிலுள்ள, மூதூர்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வித்தது. இந்தச் சண்டையில் குறுக்கிட்ட சிரியா விமானங்கள்மூன்றைத்தாம் சுட்டுத்தள்ளியதாகவும் இஸ்ரேலியர்கள் கூறினர்கள்.

நேற்று லெபனுனுக்குள் இஸ்ரேலியர் புகுந்து பாலஸ்தீன கொமாண்டோ நிலைகள்மீது தாக்குதல் நடத்தியதாகவும் இந்தத் தாக்குதல்களின்போது 11 அரபுக்

சிங்களத்தை போதனு மொழியாகப் புகுத்தியும் எமது பரம்பரையை அழிப்பதில் இவர்கள் முனைகின்றனர். இந்நடவடிக்கைகளை இதுவரை காலமும் தமிழரசுக் கட்சியினர் எதிர்த்துப் போராடி வந்துள்ளனர். தொடர்ந்தும் நாம் நமது இனம், மொழி பாதுகாப்பு பெற தியாகம் செய்து உழைத்துவருவோம். பாராளுமன்றத்திலும், வெளியிலும் பலவித போராட்டங்கள் மூலம் தமிழ் மக்களின் எதிர்ப்பை சிங்கள் இனத்தவருக்குகாட்டிவந்துள்ளோம் தமிழ்பாஷை இனம்பேணிப் பாதுகாக்கப்பட எமதுபிரதிநிதிகளை பெரும்பான்மையாகத் தெரிவுசெய்யுங்கள்.''

கள் வழங்கப்படுவதற்கு மறுப்புத் தெரிவிப்பார்கள். இந்த நாட்டில் இடதுசாரிகள் பதவிக்குவந்தால் ஜனநாயகம்அழிந்துபோவதுடன் சர்வாதிகார ஆட்சி இடம் பெறும். துப்பாக்கிக்குண்டு வேட்டுக்கள் மக்கள்மீது பலாத்காரமாக பாவிக்கப்படும். எனவே இவ்வகை அரசாங்கம் அமைய தமிழ் மக்கள் தமதுஒத்துழைப்பை வழங்கக்கூடாது. எமக்கு உரிமைகளை வழங்கமுன்வரும் எந்த அரசாங்கத்துடனும் நிபந்தனையுடன் சேர்ந்து தமிழர் உரிமைகளைப் பெற்றுத்தர நாம் முயற்சிப்போம்.

கிளிநொச்சி வேட்பாளர் மு. ஆலாலசுந்தரம், கோப்பாய் வேட்பாளர் சி. கதிரவேற்பிள்ளை, செனேற்றர் எஸ். நடராசா ஆகியோர் உட்பட மற்றும் பலர் பேசினர்.



ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் எப்படி தமிழன் அகில இலங்கையில் சிங்களவர்களுடன் நண்பர்களாகவும் சமத்துவத்துடனும் வாழ்ந்தானே அதே நிலை மீண்டும் ஏற்பட வேண்டுமென்பதற்காக வே தமிழ்க்காங்கிரஸ் பாடுபட்டு வருகிறது.''

உரும்பராய் நெசவாலை முன்றலில் நடைபெற்ற அகிலஇலங்கை தமிழ்க் காங்கிரஸ் தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசிய கோப்பாய்த் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திரு. ரி. குணரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரும்பராய் பட்டினசபைத் தலைவர் திரு. க. பத்மராசா தலைமையில் நடைபெற்ற இப் பிரசாரக் கூட்

பிரதேசங்களில் கைத்தொழிற்சாலைகள் நிறுவி வேலையில்லாத் திண்டாட்டத்தை படிப்படியாக ஒழித்து கிராமங்களின் வாழ்க்கைத்தரங்களை உயர்வடையச் செய்யவும் கோப்பாய்த் தொகுதியில் உள்ள வளர்ச்சியில்லாத கைத்தொழில் கமத்தொழில் பகுதிகளை விருத்தியடையச் செய்யவும் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர்களை ஏகோபித்து அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு. கனகநாயகம், கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. பரமானந்தராசா ஆகிய மற்றும் பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினர்.

த்த பெருமை தமிழரசுக் கட்சியையே சாரும் என சிங்களத்தலைவர் கூட பல சமயங்களிலும், பல இடங்களிலும் கூறி வருகின்றனர்.

'லண்டன் பத்திரிகை கூறியுள்ளது'

பருத்தித்துறைத்தொகுதி வேட்பாளர் திரு க துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது: 1956ம் ஆண்டு தமிழ் சர்வகலாசாலையொன்று திருமலையில் அமைக்க வேண்டும் என்று தமிழ் அறிஞர்களால் தீர்மானிக்கப்பட்டது. அதை அன்று தமிழ் காங்கிரஸ் தலைவர் எதிர்க்கவில்லை. இப்போது தேர்தல் நெருங்கியதும் யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் வேண்டும் என்றும், பிறகு யாழ்ப்பாணப் பழ்கலைக்கழகம் வேண்டும் என்றும் கிளர்ச்சி செய்து, தமிழருக்கென வரவிருந்த பல்கலைக் கழகத்திற்கு தடைபோட்டு வருகிறார்.

கடந்த 65-ம் ஆண்டு திரு. டட்லி சேனநாயக்கா திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தின் கடிதத்தை வாங்கிச் சென்று கவர்னர் ஜெனரலிடம் காட்டிய பின்னர்தான் அரசாங்கத்தை அமைத்தார் என்பதை

யைக் கொண்ட நாடுகள் பல சுதந்திரம் பெற்றுள்ளன. அதேபோல 35 லட்சம் தமிழர் இலங்கையில் சுதந்திரம்பெற்று கட்டாயம் ஒரு காலத்தில் வாழ்வோம்' என காங்கேசன்துறைத் தொகுதியில்போட்டியிடும் தமிழரசுத் தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்தை ஆதரித்து அளவெட்டி வடக்கில் நடந்த கூட்டத்தில் பேசிய மட்டுநகர் தமிழரசுவேட்பாளர் திரு. செ. இராசதுரை கூறினர்.

திரு. வெ. செல்லையா தலைமையில் கூட்டம் நடைபெற்றது

'வெளிநாட்டில் உள்ள தமிழ்பேசும் எத்தனையோ

தத் தேர்தல் முடிவில்தான், இலங்கையில் தமிழ் இனம் அரசியல் உரிமை பெறமுடியுமா அல்லது முடியாதா என்பது நிர்ணயிக்கப்படவிருக்கிறது' என திரு. இராசதுரை சொன்னர்.

கிழக்கிலுள்ள, மூதூர், மட்டக்களப்பு, திருமலை, பட்டிருப்பு, கல்முனை, கல்குடா ஆகிய இடங்களில் தமிழரசுக்கட்சி வெற்றியீட்டுவது நிச்சயமென்றும் அவர் கூறினர்.

மற்றும் செனட்டர் நடராசா, உடுவில் கிராமசபைத் தலைவர் க. முத்துலிங்கம், மா. பொன்னுத்துரை உடபடப்பலர் உரையாற்றினர்கள்.

ஏ. வி. எம் ஸ்ருடியோவில் 23 திருமணங்கள்

சென்னை, மே. 13

பிரபல சினிமா அதிபர் ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரின் புதல்வன் பாலசுப்பிரமணியத்தின் திருமணம் ஏ. வி. எம், ஸ்ருடியோவில் நடைபெற்றது. தமிழகமுதலமைச்சர் கருணநிதி ம. பொ. சி.; என் வி நடராசன் போன்ற அரசியலுலகப் பிரமுகர்களும் எம். ஜி. ஆர் சிவாஜி, ஸ்ரீதர், சின்னப்பா தேவர், பத்மினி போன்ற கலையுலகப் பிரமுகர்களும் திருமணத்திற்கு வந்திருந்தனர்.

இத் திருமணத்தையடுத்து ஏ வி எம். நிறுவனத்தைச் சேர்ந்த 22 தொழிலாளர்களுக்கு கலைஞர் கருணநிதியின் தலைமையில் திருமணங்கள் நடைபெற்றன. இத் தொழிலாளர்களுக்கு மங்கலநாண்மற்றும் புத்தாடைகளெல்லாம் ஏ. வி. எம். செட்டியாரால் வழங்கப்பட்டன. எம் ஜி. ஆரும் ஒவ்வொரு ஜோடிககு பட்டாடை உட்பட தலா ரூபா 100 பரிசாக வழங்கினர்.

அன்று மாலை நடைபெற்ற திருமண வரவேற்பில் மதுரை சோமுவின் இன்னிசை நிகழ்ச்சி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

—

கேரள அழகுராணி

கோழிக்கோடு, மே. 13

இவ்வருட கேரள அழகு ராணியாக ஜெயந்தி என்னும் இளம்பெண் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறர்.

கோழிக்கோடு நகரசபையின் ஆதரவில் நடைபெற்ற சுகாதாரக் கல்வி தொழில் சம்பந்தப்பட்ட பொருட்காட்சியிலேயே இத்தெரிவு நடைபெற்றது.

—

பெரியார் ஆஸ்பத்திரியில்

சென்னை மே, 13

திராவிடர் கழகத் தலைவர் ஈ. வே. ரா. பெரியார் உடல்நலக் குறைவு காரணமாக சென்னை அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறர்.

'உணவு, மருந்து

பற்றுக்குறையினல் மக்கள் பலவீனர்களாகியுள்ளனர்'

— ஸ்ரீமாவோ

கண்டி, புதன்

''மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய 'கியூ' வில் நீண்ட நேரம் நிற்கும் காலத்தை நாங்கள் ஒழித்து விட்டோம்எனப் பெருமையாகக் கூறும் திரு, டட்லி சேனநாயக்காதினமும் வைத்திய சாலைகளுக்கு முன்பாகவும் அரசாங்க கடைகளுக்கு முன்பாகவும், வேலைவாய்ப்பு பதிவு நிலையத்திற்கு முன்பாகவும் நிற்கும் சனத்திரளைப் பார்க்கவில்லையா?''

பேராதனையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின்பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், ''மருந்துகள் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தடைவிதித்ததாலும் அரிசி வெட்டாலும் மக்கள் சௌக்கியக் குறைவானவர்களாகப், பலவீனர்களாகிவிட்டனர். சித்தியடைந்த பல டாக்டர்களுக்கு நிதியில்லை யென்ற காரணத்தால் நியமனம் வழங்கப்படவில்லை. இதனல் போதிய வைத்தியர்கள் இல்லாததால் வைத்தியசாலைகளில் தினமும் ஏராளமான ஜனங்கள் நெடுநேரம் காத்திருந்து கசப்புறுகிறர்கள். திரு. டட்சேனநாயக்கா கடந்த தேர்தலின்போது கொடுத்த 21 வாக்குறுதிகளில் ஒன்றைத்தானும் இதுவரை நிறைவேற்றவில்லை. இதனல் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பலர் அக்கட்சியை நீங்கி எங்களை ஆதரிக்கின்றனர் கடந்த பொதுத்தேர்தலின்போது முஸ்லிம்களையும் ஏமாற்றி வாக்குகளைப் பெற்றனர் இன்று முஸ்லிம்மக்கள்இதை நன்கு உணர்ந்துள்ளார்கள்.

மேலும்படடினியால் வாடும் விவசாயிகள் எவ்வாறு உணவுற்பத்தியைப் பெருக்கமுடியும். முதலில் மக்களின் பட்டினியைப் போக்கவேண்டும். சிங்கள மன்னர்கள்காலத்தில் விவசாயிகள 3 நேரமும் சோற்றையேயுண்டார்கள. இதனல் உணவுற்பத்தியையும் நல்ல நிலையில் இருந்தது எனக் கூறினர்.

திருவாளர்கள் டபிளயு ராஜபக்சே, ஜி. எஸ் ரத்னவீர, ஏ. தஸநாயக்கா, ரி பி ஜயசுந்தர உடபடப்பலர் உரையாற்றினர்.

——

பரிசோதனை

பரிஸ், மே 13

பிரான்ஸ் மிகப் பெரியளவில் புதிய அணுகுண்டுப் பரிசோதனைகளை இவ்வாரத்தில் நடாத்தவுள்ளது. இப்பரிசோதனைகள் பசிபிக் சமுத்திரத்தில் நடைபெறவுள்ளதால் கப்பல்களையும், விமானங்களையும் தூர விலகிச்செல்லும்படி பிரான்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

முன்னேற்றத்தை தடுக்க முடியாது

—கிரி

பெங்களூர், மே 13

'மக்களின் சிந்தனைவேகம் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது: பொதுமக்களின் முன்னேற்றத்தை எந்தச் சக்தியாலும் தடுத்துநிறுத்திவிடமுடியாது' என இந்திய ஜனதிபதி வி. வி. கிரி, பெங்களூரில் நகரசபையினர் தமக்களித்த வரவேற்பின் போது கூறினர்.

'மக்கள் பொதுப் பிரச்னையை ஒற்றுமையுடனும், நம்பிக்கையுடனும் தீர்க்க வேண்டும்' என்று அவர் தமது உரையின் போது கேட்டுக்கொண்டார்.

— —

உயிருடன் 174 வயது

முது பெரும் கிழவர்

அடிஷ்அபாபா, மே12

அபுபக்கர் உமர் ஆதம் என்னும் முதுபெரும்கிழவர் எதியோப்பியா உயிருடன் இருக்கிறர். நைஜீரியாவில் பிறந்த இவர் 80வது வயதில் எதியோப்பாவிற்கு வந்துள்ளார்.

மெக்கா யாத்திரை சென்று திரும்பியதும் தேசிகஹூமேரா என்னும் இடத்திற்கருகில் குடியேறிவிட்டார். ஒரு நூற்றுண்டுகாலமாக எதியோப்பியாவில்வாழ்பவராயினும் இம்மொழியிற் பரிச்சியம் இல்லாதவராக இருக்கின்றர்.

எல்லோரும் உண்ணும் உணவையே புசிக்கும் இவருக்கு புலாலுணவே பிரதானமானதாம். இவருக்குப்பின் எத்தனை பிள்ளைகள் பேரப்பிள்ளைகளென்று சரியாகத்தெரியவில்லை.

— —

மகராஷ்டிர கலவரம்

புதுடில்லி, மே. 13

இந்தியாவில் அடிக்கடி வகுப்புககலவரங்கள் நிகழ்வது குறித்து கவலைதெரிவித்த இந்திய உள்நாட்டு அமைச்சர் திரு: சவான் இவ்வகுப்புக்கலவரங்களுக்குக் காரணம் அரசியலில் வகுப்புவாதம் நிலவுவதே என்று நேற்று லோகசபையில் கூறினர்.

மஹாராஷ்டிர புரத்தில் நடந்தவகுப்புக்கலவரத்தை சுட்டிக்காட்டிப் பேசுகையிலேயே அவர் இவ்விதம் கூறினர்.

மஹாராஷ்டிரத்தில் வகுப்புக்கலவரங்களில் மாண்டவர்களின் எண்ணிக்கை 100க்கும் அதிகமாகிவிட்டதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

— —

புதிய அதிபர்

கோட்டை, புதன்

கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்த மகா வித்தியாலய அதிபர் திரு. இ. கனகலிங்கம் யாழ்ப்பாணம் மண்டைதீவு மகாவித்தியாலயத்துக்கு மாற்றம் பெற்றுள்ளதால் கேகாலை சாந்தமரியாள் தமிழ் மகா வித்தியாலய அதிபர் திரு. வ. நடராசா இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் கொழும்பு விவேகானந்தாவுக்கு புதிய அதிபராக மாற்றம் பெற்றுள்ளார். இவருக்கு கல்வி அமைச்சரால் இரண்டாம் தர விசேட பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வ. நடராசா முன்பு பல வருடங்களாக விவேகானந்தாலில் உதவியாசிரியராக இருந்தவர். பின்பு தலைமையாசிரியராகவும் பதில் அதிபராகவும் அங்கு கடமையாற்றியவர்.

'தமிழ்மக்கள் விழித்துவிட்டனர்'

கொடிகாமம், வியாழன்

'நான் எவ்வளவு சேவையை இத்தொகுதிக்குச் செய்தேன். நான் பிரதிநிதியாகவிருந்த காலத்தில் போடப்பட்ட றேட்டுகள் எத்தனை கட்டப்பட்ட குளங்கள் எத்தனை? எத்தனை தொழிற்சாலைகள்? இவைகளால் இன்று எத்தனை குடும்பங்கள் தமது வாழ்க்கையைக் கஷ்டமின்றி கழிக்கின்றன' என்று மிருசுவில் வடக்கில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முன்னுள் சாவகச்சேரி எம். பி. திரு. வே. குமாரசாமி கூறினர்.

திரு. எஸ். அம்பலவாணர் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது:

'இன்றைய நிலையில் தமிழ்க் காங்கிரஸ் செய்த சேவையை உணர்ந்துவிட்டனர். தமிழ்மக்கள் விழிப்படைந்துவிட்டனர். அவர்கள் தமிழ்க்காங்கிரஸ் செய்த சேவையை உணர்ந்துவிட்டனர். தமிழரசுக் கட்சியினரால் தாங்கள் பட்ட கஷ்டங்களையும் உணர்ந்துவிட்டனர்.

இக்கூட்டத்தில் வழககறிஞர் சி. பொ. மயில்வாகனன், த. குலேந்திரராசா உட்பட அனேகர் பேசினர்.

"தமிழரசு ஆதரவை கூட்டணி ஏற்காது"

சுதந்திரக்கட்சி பிரமுகர் கூறுகிறர்

யாழ்ப்பாணம், வியா

'திரு. அமிர்தலிங்கம் போன்றதமிழரசுக் கட்சித் தலைவர்கள் கூட்டணி ஆதரவாளர்களின் ஆதரவைப் பெறுவதற்காக, இம்முறை கூட்டணிக்கு தமிரசுக்கட்சி ஆதரவைக் கொடுக்குமென்று சொல்லித் திரிகிறர்கள், ஆனல் கூட்டணி தமிழரசுக்கட்சியின் ஆதரவை ஏற்றுக்கொள்ளாது. தமிழரசுக்கட்சி, காங்கிரஸ் கட்சி ஆதரவைப் பெறுவதினல் தேசிய ஒற்றுமை ஏற்பட்டுவிடாது. மக்கள் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்தை அமைப்பதனுலேயே உண்மையான தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். சிங்கள தமிழ் மக்களுடைய ஒற்றுமையே தேசிய ஒற்றுமைக்கு அவசியமானது. அதனல்தான் திருமதி பண்டாரநாயக்காவும், டாக்டர் என் எம். பெரேராவும் என்னைக் கோப்பாயில் போட்டியிட வைத்தார்கள்'

இவ்வாறு உடுவில் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. காராளசிங்கத்தை ஆதரித்து சுன்ணுகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கோப்பாய் வேட்பாளர் திரு. எம். துரைராசா கூறினர்.

மேலும் அவர்தொடர்ந்து கூறியதாவது:-

தங்களைத் தெரிவு செய்த தொகுதிகளின் பொருளாதார அபிவிருத்திக்கு, வளர்ச்சிக்கு இவர்கள் ஒன்றுமே செய்யவில்லை. கூட்டணி அரசாங்கம் மக்கள் நேரடியாகப் பங்குகொள்வதை விரும்புகிறதே தவிர மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே தமிழரசுக் கட்சி காங்கிரஸ் கட்சி போன்ற ஏஜண்டுகள் செயல்படுவதற்கு உற்சாகம் கொடுக்காது.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் வி. காராளசிங்கம், வி. பொன்னம்பலம், பி. நாகலிங்கம், எம். நடராசா ஆகியோரும் பேசினர்.

— —

"தமிழ் மக்களின் பொறுப்பு"

திருக்கோணமலை, புதன்

''திருமலைத் தொகுதியில் சிங்கள மகாஜன கட்சியின் சார்பில் போட்டியிடும் திரு. ஆர். ஜி. சேனநாயகா தான் தேர்தலில் தோற்பது நிச்சயமென்று உணர்ந்துள்ளார். எனினும் எதிர்காலத்தில் திருமலைப் பகுதியில் இருந்து சிங்கள பிரதிநிதியை ஆட்சி மன்றத்துக்கு அனுப்பிவைப்பதற்கு அவர் இப்போதே திட்டங்கள் போட்டுவருகிறர். தமிழர்களின் பிரதேசமான திருமலையை சிங்களவரிடம் ஒப்படைக்காது காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களிடமேயுண்டு.''

திருமலை தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. நேமிநாதனை ஆதரித்து நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் வழக்கறிஞர் திரு. ஆர். சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. சீதாராமன் தலைமையில் நடைபெற்றது.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம்
31-ந் திகதி (14-5-70)

சைவ மகாநாடு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையின் சார்பிலே சென்ற மூன்று நாட்களாக நடைபெறும் சைவமகா நாட்டுக்கு இம்முறை தமிழகத்திலிருந்து தருமை ஆதீனப் புலவர் சித்தாந்தக் கலைமணி திரு. அருணை வடிவேல் முதலியார் வருகை தந்து, சைவம் தழைப்பதற்கான பல பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். வருடாவருடம் இவ்விதம் சைவ அறிஞர்களை, பிரயாணத் தடைகள் கடுமையாக இருக்கும் இக் காலத்திலும் வரவழைத்து, அரிய சைவப்பணியாற்றும் சைவ பரிபாலன சபைக்கு ஈழத்து சைவசமூகத்தின் நன்றி பெரிதும் உரியதாகும்.

திரு. முதலியார் அவர்கள் முதல் நாளன்று தலைமைவகித்துப் பேசுகையில் "தமிழ் நாட்டிலே சைவசமயக் கல்வியை சைவ இளைஞர்களுக்கு அளிக்கக் கல்விநிலையங்களில் அறவே வாய்ப்பில்லை. ஆனால் இங்கு ஈழத்திலே அவ்வாறான நிலைமை இல்லாமல், கல்வி நிலையங்களிலேயே சமயக் கல்வியை ஓரளவிலேனும் அளித்தற்கு வாய்ப்பிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி" என்று பாராட்டி, இந்த வாய்ப்பினை சைவசமயிகள் நன்கு பயன்படுத்தித் தங்கள் இளம் சந்ததியினருக்குச் சமயக்கல்வியைத் தவறாது தருதல்வேண்டும் என்றும் கூறி, இப் பணியில் இளைஞர்களை ஒதுக்கிவைக்காமல், அவர்களுக்கு முதல் பங்கு தரவேண்டுமென்றும் சரியாக அறிவுறுத்தினார்கள்.

சமயபாடம் இங்கு பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படுகிறதெனினும் அதைப் படிப்பிக்கக்கூடிய தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் அதிகமில்லாதது பெருங் குறை. பல பள்ளிக்கூடங்களிலும் சைவப் புலவர்களை நியமித்து அவர்கள் மூலம் இக் கல்வியை மாணவர்களுக்கு போதித்தல் அதிக பயன் தரும். சமயபாட போதனை எளிதன்று. தக்க அறிவும் பயிற்சியும், ஆசார அனுட்

சிறுவர் உள்ளத்தில் இக் கருத்துக்களை விதைத்தால், அவர்கள் வாழ்க்கையில் பல சிக்கல்களையும் நம்பிக்கையுடன் சமாளித்து வெற்றிபெற உதவியாக இருக்கும்.

இக்காலத்து மாணவ உலகிலே, சமயநம்பிக்கை, மகாவித்வான் கூறுவது போல் பெரிதும் குறைந்து வருகின்றது. காரணம் சமயத்தால் இயத இந்த உலக வாழ்க்கைப் போராட்டத்துக்கு உதவி எதுவுமில்லையென்றும் சமூகச் சிக்கல்களைத் தீர்க்க அது வழி செய்யவில்லையென்றும் கருதுவதால்தான். சமயங்கள் மக்களை அன்பின் மூலம் ஒற்றுமைப்படுத்த வேண்டியிருக்க, மக்களைப் பிரித்து சண்டைசச்சரவுகளையும் மூட்டி அமைதியையும் குலைப்பதையும் சமயத்தின் பேரால் மக்கள் சுரண்டப்படுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. நன்மையையும் பயனையும் கண்டால்தான் மக்கள் உள்ளம் அதில் பதியும் சமயத்தின் இதய ஸ்தாபனங்களான கோயில்கள் மக்களுக்கான பல அன்புப் பணிகள் மூலம் சமூகத்தின் குறைகளைத் தீர்ப்பதற்கே ஏற்பட்டன. அப் பணிகள் வெகுவாக நின்றதால், மக்கள் கோயில்களுக்குச் செல்வதும் பெரிதும் குறைந்தது. சைவசமய வளர்ச்சியும் குன்றியது.

சிவசம்பந்தமுடையது சைவம் என்றும், சிவம் என்றால் அன்பு என்றும் கூறுகிறார்கள். இன்று சைவ சமூகத்திலேயே அன்புக்கு எவ்வளவு இடமுள்ளதென்பதை சற்றே நினைத்துப் பார்த்தால் சமயமென்பது வெறும் பேச்சிலும் பூச்சிலும் நின்றுவிட்டதென்பதை உணரலாம். இந்த அவலநிலை நீங்கி, சைவம் மீண்டும் உண்மையில் தலைதூக்கவேண்டுமாயின் நடமாடும் கோயில்களான மக்களுக்கு, சீலர்களுக்கு அன்புப் பணிகள் பெருக வேண்டும், இதன்மூலம் தான் சைவம் காக்கப்பட முடியும். சைவபரிபாலன

பயங்கர இரத்தக்களரிக்கு வித்திடவிருந்த புரட்சித்திட்டம்!

'சேகுவரா' இயக்கம் பற்றி மேலும் சில தகவல்கள்

நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பாற்றுவதற்காக பயங்கரஇயக்கமொன்று தலைமறைவாக வளர்ந்துவந்துள்ளது என்பதில் பொலிசாருக்கு இப்பொழுது எதுவித சந்தேகமும் இல்லை.

இந்த இயக்கத்தைப் பற்றிய சகல தகவல்களையும் சேகரித்து சம்பந்தப்பட்ட பேர்வழிகள் அனைவரையும் மடக்கிவிடமுடியும் என்பதில் பொலிசார் உறுதிகொண்டிருக்கிறார்கள். பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் இந்த வேளையில் பொதுமக்களுக்கு எதுவித அச்சமும் ஏற்படாத வகையில், நிலைமையைச் சமாளிப்பதில் பொலிசார் மிகவும் கவனமாக இருக்கிறார்கள்.

பயங்கர நடவடிக்கைகள் மூலம் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தத்திட்டமிட்டிருந்த இவ்வியக்கத்தினர் சம்பந்தமாக விசாசணைகளில் ஈடுபடவும் அவசர நடவடிக்கைகள் எடுக்கவுமென விசேஷ பயிற்சிபெற்ற அதிகாரிகளைக்கொண்ட 'கொரில்லா எதிர்ப்பு' படையொன்றைப் பொலிஸ் இலாகாவினர் உருவாக்கியுள்ளனர். 'சே குவேரா' என்ற பயங்கர இயக்கம் சம்பந்தமாக புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ள விசேஷ பொலிஸ் உளவுப்படையினர் ஓர் உப அணியாகவே மேற்குறித்த கொரில்லா எதிர்ப்புப்படை இயங்கும்.

இதுவரை இந்தப்பயங்கர இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நூற்றுக்கணக்கானவர்கள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏராளமானவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மயிர்சிலிர்க்கும் தகவல்கள்

பொலிசார் நடத்தியுள்ள விசாரணைகளில் இந்த இயக்கம்பற்றிய மயிர் சிலிக்கும்

ளில் நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட பலரிடமிருந்தும் நாட்டுக்குண்டுகள் தயாரிப்பதற்குத் தேவையான வெடி மருந்து உலோகத்துண்டுகள், வயர்கள். போத்தல்கள், கரு மருந்து போன்ற மூலப் பொருட்களைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இவர்களில் சிலரிடம் களவுபோன ஆயுதங்களும், தோட்டாக்களும் கூட இருந்தனவாம்.

அரசாங்க அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களைப்போன்றவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தனர், மேற்குறித்த பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இவ்வியக்கம் செயல்பட்டுவந்திருக்கிறதாம்.

புதியவர் வந்தார்

மொனராக்கலைப் பகுதியில் 'சே குவரா' இயக்கம் எப்படி ஆரம்பமாகியது பற்றிக் கூறப்படுவதாவது:-

அப்பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவருடன் புதிய ஆசாமி ஒருவர் ஒரு தினம் வந்தார். அங்கு செல்வாக்கு மிகக வேலையற்ற வாலிபர் ஒருவருக்குப் புதியவர் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார். அதன் பின்னர் குறிப்பிட்ட ஒரு தினத்தில் அப்பகுதியிலுள்ள வேலையற்ற இளைஞர்களின் கூட்டமொன்றுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டது. இக்கூட்டத்தில் அந்தப் புதியவர்புரட்சி இயக்கம் பற்றி விளக்கினார். எவ்வொருவரும் தமக்குரிய பாகத்தைப் புரட்சியின் போது செய்துமுடித்தால் உரிய முறையில் பரிசளிக்கப்படுவார் என்று புதியவர் உறுதியளித்தார். இம்மாதிரிப் பல கூட்டங்கள் இரகசியமாக நடத்தப்பட்டன. முக்கியஸ்தர்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு சைக்கிளில் [illegible] கத்தைச் [illegible] ஒரு சமிக்ஞை மூலம் அறி

அரசாங்க கட்டிடங்களிலேயே நடைபெற்றிருப்பதாகப் பொலிசார் கருதுகின்றனர்

புரட்சி வந்தால்

புரட்சிக்குப் பின் எடுக்கப்படவிருந்த நடவடிக்கைகள் என்னவென்பது பற்றிப் பொலிசாருக்குக் கிடைத்துள்ள தகவலாலன:-

அரசியல் கட்சிகள் யாவும் தடைசெய்யப்படும். ஜனநாயக அமைப்பு ரத்துச்செய்யப்படும்.

இப்போதைய அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் புரட்சி இயக்கத்தை அங்கீகரிக்கும்படி செய்யப்படுவர்

தேயிலை, ரப்பர், தென்னந் தோட்டநிர்வாகங்கள் புரட்சியாளர்களிடம் கைளிக்கப்படும். தோட்டங்களில் உள்ள இந்தியர்கள் உடனடியாகத் துரத்தியடிக்கப்படுவார்கள்

பொலிசார் கைப்பற்றிய தஸ்தாவேஜுகளில் மேலும் கிடைத்த தகவல்களாவன:

வன்முறைமூலமே ஆட்சியை மக்கள் கைப்பற்ற முடியும். சீனா, கியூபா, அல்பேனியா போன்றநாடுகளில் புரட்சிமூலமே மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள். ராணுவத்தில் தற்பொழுது சேவைபுரியும் புரட்சிவாதிகள் புரட்சிக்குத்தேவையான ஆயுதங்களையும் தோட்டாக்களையும் வழங்குவார்களா வானொலியும், பத்திரிகைகளும் கைப்பற்றப்படும்.

புரட்சிக்கு பெருமளவில் எதிர்ப்பு இருப்பின் உறுப்பினர்கள் பாலங்களையும் இதரத் தொடர்புகளையும் தகர்த்துவிடுவார்கள். மின்சாரமும் துண்டிக்கப்படும்.

கொரில்லா முகாம்

கடந்தவாரம் வெல்லவாயாவில் பொலிசார் கொரில்லா முகாம்ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட இந்த முகாமில் போர் பயிற்சிகளைப் பெற்றதாக கைதானவர்களில் சிலர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், ராணுவஅதிகாரி ஒருவர் இவர்களுக்கு கராட் பயிற்சியளித்ததாகவும் கூறப்படுகிறது. படம் பார்ப்பது, புகைப்பது தேநீர் குடிப்பது போன்றவற்றை தியாகம் செய்து பணம் சேகரிக்கும்படியும் இவர்கள் கேட்கப்பட்டிருந்தனராம்,

தலைவர் யார்?

இந்த இயக்கத்தின் தலைவர் அல்லது தலைவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் பொலிசார்பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள், கைதானவர்கள் பலர் இயக்கத்தின் தலைவர்கள் யார் என்பது தமக்கே தெரியாது என்று கூறியுள்ளனர். இவர்களில் ஒருவர் தம்மைக்கொன்றுபோட்டாலும் தலைவர்கள்பற்றிய விபரத்தைச் சொல்லப்போவதில்லையென்று அடம்பிடித்து வருகிறாராம்.

ஐயாறன் எழுதுவது..

ஐயாறன் எங்கே காணவில்லை? என்று சில அன்பர்கள் கேட்கின்றனர். சில நாட்களாக மனதில் ஏதோ ஒரு பளு. நிம்மதி இல்லை. மனதில் உற்சாகமில்லாவிட்டால் எழுத்து எப்படிஓடும்?

மேலும் தேர்தல்போராட்டம் மும்முரமாக நடக்கிறது. அச்செய்திகளுக்கே இடம் காணவில்லை. ஆதலால் என் எழுத்தை சற்றே நிறுத்திக்கொண்டேன்.

இவ்வித நிலையில் நேற்றுக்காலை தேவாரமணி இராஜசேகரன் அவர்கள் எதிர்பாராத முறையில் வந்தார். பாடச்சொல்லிக் கேட்டேன் அவரது தெய்வீக இன்னிசையால் என் வேதனை விசாரமெல்லாம் மறைந்து, பேனா மீண்டும் எழுதத் தலைப்பட்டது! இந்தத் தெய்வீக இசைக்குத்தான் எவ்வளவு சக்தி!

"உடலில் ஏதும்நோய் கண்டால், "மாசில்வீணையும் மாலை மதியமும்..." என்ற தேவாரப்பதிகத்தைப் படனம் செய்தால் உடம்பு குணமாகிவிடும். இது உறுதி என்று சைவ சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் யாழ்ப்பாணத்தில் ஓர் அன்பருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பணம் வேண்டுமா? மழை வேண்டுமா? நோய் நீங்கவேண்டுமா? விவாகமாகவேண்டுமா? குழந்தை வேண்டுமா? எது வேண்டுமாயினும் சரி, அதற்கான தேவாரங்கள் இருப்பதாயும் அவற்றைப் பாடினால் வேண்டுவனவெல்லாம் கிடைக்குமென்றும், இது தமது சொந்த அனுபவமென்றும் சொல்லுகிறார் தேவாரமணி இராஜசேகரன். குறித்த தேவாரத்தைப் பாடினால், பணம் முதலியன கிடைத்துவிட முடியுமா? என்று சிலர் கேட்கக்கூடும். எல்லாம் அவரவர் நம்பிக்கையில் தான் உள்ளது.

சில நாட்களுக்கு முன் வண்ணை அரசடி விநாயகர் கோவிலில் நடந்த ஒரு திருவிழாவில் அவரது தேவார இன்னிசை விருந்து நடைபெற்றது ராதாகிருஷ்ணன் வயலின், சிவபாதசுந்தரம் மிருதங்கம், தேவாரமணி பாடுகையில் ஓர் இடத்தில் வயலின் கம்பி சற்றே தளர்ந்துவிட்டது, யாழ் முறிப் பண் கதை உண்மையாகவே இருக்கவேண்டுமென்று தோன்றியது! இந்தப் பக்க வாத்தியங்களுடனே நடைபெறும் இத்தெய்வீக இன்னிசை கேட்போர் உள்ளத்தையெல்லாம் கவர்ந்து பேரின்பமளிப்பதாகவுள்ளது.

இவ்வித தெய்வீகக் கலைஞரை ஈழத்துக்கு வரவேண்டாமென்று தடுக்க ஒருவர் முயற்சித்தாராம்! நல்ல வேளையாக அந்த முயற்சி பலிக்கவில்லை என்று ஓர் அன்பர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்

இளவயதிலே சினிமாவில் சேரவே இராஜசேகரன் முயற்சித்தாராம். ஆனால் அது வேண்டாமென்றும், இறைவனைப் பாடினால் வேண்டியன எல்லாம் கிடைக்குமென்றும் அவரது தந்தையார் தடுத்தாட்கொண்டதாக அறிந்தேன். அவர் சினிமாவில் சேர்ந்திருந்தால் அவருக்கு அதிக பணம் கிடைத்திருக்கலாம். புகழும் பரவியிருக்கலாம். ஆனால் இங்கு ஈழத்திலே தேவார இன்னிசையாகிற தெய்வீகப் பயிர் பலர் மூலம் இங்கு வளரமுடிந்திருக்குமா? ஈழம் செய்த புண்ணியந்தான் அவர் சினிமாவில் சேராதது! தெய்வீகத்தைப் பரப்பும் படங்களில் நடிப்பதில் தவறில்லை. சினிமாப் படங்கள் மூலம் சமூகத்துக்குப் பல நன்மைகளையும் செய்ய இடமுண்டு. அவ்வித வாய்ப்பு இனி இராஜசேகரத்தாருக்குக் கிடைப்பதாயின் அதுவும் திருவருளே!

0 0 0

'நான்குவேதங்களில் 'இந்து' என்ற சொல் பாவிக்கப்படவில்லை'

சைவ மகாநாட்டில் சைவப் புலவர் மணி

யாழ்ப்பாணம், வியாழன் "நான்கு வேதங்களிலாவது திருமுறைகளிலாவது சித்தாந்த சாத்திரங்களிலாவது 'இந்து' என்ற சொல் பாவிக்கப்படவில்லை. 'இந்து' என்ற சொல் தமிழ்நாட்டில்

ஒரு சிலரின் சத்தியமே அதர்மம்மேலோங்கி நிற்கும் இந்த உலகத்தைதாங்கி சமன் செய்கின்றது. நீதி நெறியாளர்கள் இல்லாது போயிருப்பார்களானால் இந்த உலகம் எப்பவோ ஒரு நாள் ஆண்ருண்டுபோயிருக்கும் ஒருசிலர் நீதியோடு வாழ்வதனாலேயே உலகம் வாழ்கின்றமைதான் உண்மையாகும்."

பல பள்ளிக்கூடங்களிலும் சைவப் புலவர்களை நியமித்து அவர்கள் மூலம் இக்கல்வியை மாணவர்களுக்கு போதித்தல் அதிக பயன் தரும். சமயபாட போதனை எளிதன்று. தக்க அறிவும் பயிற்சியும், ஆசார அனுட்டானமும் உள்ளவர்களே இதைப் போதிக்கத் தகுதி வாய்ந்தவர்கள். பரீட்சையில் சில புள்ளிகளைப் பெற்று தேறுவதற்காக மட்டுமன்றி, சமயபோதனை. வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டியாக உதவக்கூடியதாக இருத்தல் வேண்டும். இளம்வயதிலேயே

மீண்டும் உண்மையில் தலை தூக்கவேண்டுமாயின் நடமாடும் கோயில்களான மக்களுக்கு, சீலர்களுக்கு அன்புப் பணிகள் பெருக வேண்டும், இதன்மூலம் தான் சைவம் காக்கப்பட முடியும். சைவபரிபாலன சபைபோன்ற ஸ்தாபனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு மக்களுக்குத் தேவையான பலபல அன்புப் பணிகளைச் செய்யமுடிகின்றதோ, அந்த அளவிலேயே மேன்மை கொள் சைவநீதியும் சைவ சமயமும் பாதுகாக்கப்பட முடியும்.

மேற்கு ஆசியா

மேற்கு ஆசியாவில் இஸ்ரேலியர்களும் அராபியர்களும் வாழ்வதற்கு இடமிருக்கிறதென்றும் அராபியர்களும். இஸ்ரேலியர்களும் நட்புறவுடன் அமைதியாக வாழமுடியுமென்றும் இஸ்ரேலிய பிரதமர் திருமதி கொல்டாமெயர் கூறியிருக்கிறார். இஸ்ரேலின் இருபத்திரெண்டாவது தேசியதினத்தையொட்டி அவர் விடுத்த செய்தியில் பேச்சுவார்த்தை மூலம் அராபியர் ஜீவாதார உரிமைகளையும் அவர்களின் கௌரவத்தையும் மதித்து நட்புறவுடன் வாழத் தயாராக இருப்பதாகவும் திருமதி மெயர் கூறியிருக்கிறார். நட்புறவுடன் அமைதியாக வாழமுடியும் என்று கூறினால்மட்டும்போதுமா செயலிலுமல்லவா காட்ட வேண்டும்?

சரியோ பிழையோ இஸ்ரேல் என்று ஒருநாடு உருவாக்கப்பட்டு அதுவே தங்களின் தாய்நாடுஎன்று யூதர்கள் கருதி அதைக் காப்பதில்தான் தங்களின் வாழ்வும் தாழ்வும் தங்கியிருக்கிறதென்று அவர்கள் முடிவுசெய்திருக்கின்றனர். ஆனாலும் எங்கேயோ இருக்கின்ற ஒரு பெரிய அரசின் பக்க பலத்தை நம்பி இவர்கள் வாழமுடியுமா? நாற்புறமும் உள்ளவர்களை எந்நேரமும் பகைத்துக் கொண்டு வாழமுடியாது. அவர்களின் அன்பையும் நட்பையும் பெறவேண்டியது நிம்மதியான வாழ்வுக்கு அவசியம்.

அராபியர்களுடன் நட்புறவுடன் வாழத்தயாராக இருப்பதாகவும்அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த தயாராகஇருப்பதாகவும் இஸ்ரேலியர்கள் அடிக்கடி கூறுகிறார்கள், 1967ம் ஆண்டில் நடந்த ஆறு நாள் யுத்தத்தின் போது கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களை ஐ. நா. பாதுகாப்புச் சபையும் மற்றும் உலக நாடுகள் பலவும் விடுத்த வேண்டுகோளையும் புறக்கணித்து, இன்னமும் தங்கள் பிடியிலேயே இஸ்ரேலியர் 'வைத்திருக்கின்றனர். யுத்தத்தின் மூலம் கைப்பற்றிய பிரதேசங்களைத் தங்கள்வசம் வைத்துக்கொண்டு 'நட்புறவுடன் வாழ்வோம், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள்' என்று அழைப்பதன் அர்த்தம் என்ன? சுயமரியாதையுள்ள எவரும் இதற்கு இணங்குவார்களா? வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற திமிருடன் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அராபியர்கள் அதற்கு இணங்க முடியுமா?

மேற்கு ஆசியாவில் அமைதி நிலவவும்,மேற்கு ஆசியத் தகராறு காரணமாக இலங்கை போன்ற சிறிய நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கித் தவிக்கும் நிலை நீங்கவும், இஸ்ரேலியர்கள் ஐயமும் அச்சமுமின்றி நிம்மதியாக வாழவும், யுத்தத்தின்போது கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களை விடுத்து அங்குள்ள இஸ்ரேலியர்களைத் திரும்பஅழைத்து, அதன்பின் அராபியர்களைப் பேச்சுவார்த்தைக்குஅழைப்பதே முறையும் நியாயமுமாகும்.

இதே சமயம் இஸ்ரேலை அராபியர்களும் அங்கீகரித்துவெளிவல்லரசுகளை நம்பியிராமல் தாமும் வாழ்ந்து மற்றவர்களும் வாழட்டும் என்ற மனப்பான்மையுடன் இஸ்ரேலியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அராபியர்களும் முன்வரவேண்டும். தேசியதினத்தையொட்டி விடுத்தசெய்தியில் சோவியத் யூனியனிலுள்ள யூதர்களையும் இஸ்ரேலுக்கு வருமாறு பிரதமர் கொல்டா மெயர் அழைத்திருக்கிறார். அவர்கள் அங்கேயே நிம்மதியாக இருக்கட்டும் உள்ள தொல்லை போதாதென்று அவர்களையும் ஏன் அழைக்கவேண்டுமோ தெரியவில்லை.

கள். ஏராளமானவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மயிர்சிலிர்க்கும் தகவல்கள்

பொலிசார் நடத்தியுள்ள விசாரணைகளில் இந்த இயக்கம்பற்றிய மயிர் சிலிக்கும் ஏராளமான தகவல்கள் வெளிவந்துள்ளன. வெடித்துத் தீக்குழம்புகளை நாற்புறமும் கக்குவதற்கு தயாராய் இருக்கும் எரிமலை ஒன்றின் நிலையில் இந்த இயக்கம் தயாராயிருந்துள்ளதாக உயர்தரப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். இவர்களின் நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையில் பொலிஸ் எடுத்துள்ள பல எதிர் நடவடிக்கைகள் வெற்றிநிளித்துள்ளன.

மொனராகலை, ருகலை, தம்பகல்லை ஆகிய பகுதிக

ரிப் பல கூட்டங்கள் இரகசியமாக நடத்தப்பட்டன. முக்கியஸ்தர்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு சைக்கிளில் போவார்கள். இயக்கத்தைச் சேர்ந்தவாகளுக்கு ஒரு சமிக்ஞை மூலம் அறிக்கை தருவார்கள். அதன் பின்னர் குறித்த இடத்தில் கூட்டம் நடைபெறும். இக் கூட்டங்களுக்கு முக்கிஸ்தர் ஒருவர் தலைமைவகிப்பார். அவரைமற்றவர்கள் 'மகாத்தயா' என்று அழைப்பார்கள். அவரை மற்றவர்களுக்கு யார் என்று தெரியாது. இயக்கத்தின் தலைவர் யார் என்றும் எவருக்கும் தெரியாது. புரட்சி ஆரம்பமாகும் தினத்தில் மட்டுமே தலைவர் யார் என்பது அறிவிக்கப்படும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது இக்கூட்டங்களில்பலவும்

ஓய்வு பெறும்வயது, நமது அரசியல் தலைவர்களுக்கு!

இலங்கை அரசியல் தலைவர்கள் 50 வயதுக்கு மேற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்! ஆட்சி புரியும் ஐ. தே. கட்சி பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு வயது 59. இவரது துணைமந்திரியும், இராஜாங்க மந்திரியுமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு 64 வயது. முன்னாள் பிரதம மந்திரியும்: தற்போதைய உள்நாட்டு அமைச்சருமான திரு. டபிள்யு. தகநாயக்காவுக்கு வயது 68. நிதி மந்திரி யு. பி. வன்னிநாயக்காவுக்கு 65 வயதும் காணி நீர்ப்பாசன மந்திரி சி. பி. டி. சில்வாவுக்கு 58 வயதும், தபால் தந்தித் தொடர்பு மந்திரி மொண்டேகு ஜெயவிக்கிரமாவுக்கு 59 வயதும், சுகாதாரமந்திரி ஈ. எல். சேனநாயக்காவுக்கு 50 வயதும், இவர்களுள் இளைய மந்திரியும் உள்ளூராட்சி மந்திரிமான திரு. ஆர். பிரேமதாசாவுக்கு 46 வயது மாகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு 54ம், அவரது சகா திரு. மைத்திரிபாலசேன நாயக்காவுக்கு 53ம் லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேராவுக்கு 63ம், இக்கட்சிச் செயலாளர் லெஸ்லி குணவர்த்தனாவுக்கு 61ம், இவர்களுள் இளைய தலைவருமான திரு. பெர்னாட் சொய்சாவுக்கு 56 வயதுமாகிறது.

மாஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவிற்கு 69 வயது. செயலாளர் திரு. பீற்றர்கெனமனுக்கு 53 வயது.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமே அரசியல்வாதிகளுள் மிகவும் மூத்தவர். இவருக்கு வயது 72 ஆகும். காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலத்திற்கு 69 வயதாகும்.

பிரதமரின் ஒன்றுவிட்ட சகோதரரும், சிங்கள மகாஜனக் கட்சித் தலைவருமான திரு. ஆர்.ஜி. சேனநாயக்காவுக்கு 59 வயது, தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினத்திற்கு 57 வயது.

இலங்கை அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஓய்வு பெறும் வயது 55. ஆனால் அரசியல்வாதிகளுக்கு இந்த வயதெல்லை இல்லாததினால் அவர்கள் இப்படியே சென்றுகொண்டிருக்கிறார்கள். (சி. பி. ஏ (

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 14-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம், வியாழன்

''நான்கு வேதங்களிலாவது திருமுறைகளிலாவது சித்தாந்த சாத்திரங்களிலாவது 'இந்து' என்ற சொல் பாவிக்கப்படவில்லை. 'இந்து' என்ற சொல் தமிழ்நாட்டில் தோன்றியதல்ல, 'இந்து' என்ற சொல்லும் பொழுது வடமொழியும் சேர்ந்து ஒலிக்கின்றது.''

இவ்வாறு சைவப்புலவர்மணி திரு. த. குமாரசாமிப்பிள்ளை சைவமகாநாட்டின் மூன்றாவது நாள் நிகழ்ச்சிக்குத்தலைமைதாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில் ''இந்து சமயப்பாடத்திட்ட நூல் என்பதைச் சைவசமயப்பாடத்திட்ட நூல் என்று என எதிர்காலத்தில் மாற்றி வெளியிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தேவார பாராயணத்துடன் ஆரம்பமான இம்மகாநாட்டில் சேக்கிழார் தெய்வத் தமிழ் என்ற பொருளில் உரையாற்றிய மாயுரம் அ' வ. அ. கல்லூரி பயிற்றுசிரியர் திரு. ஆ. பாலவொயன் பேசும்போது கூறியதாவது: இக்காலத்தில் கவிதை எழுதும்படி ஒரு மாணவனை நாம் தூண்டினால். அவன் ''மானே தேனே'' என்று இக்கால உணர்ச்சிக் குத்தக ஏதோ ஒரு பெண்ணை மனதில் வைத்து சொல்லை தப்புந் தவறுமாகச் சொல்லிக் கொண்டேபோவான் சேக்கிழார் பெருமானின்காவிய நாயகன் சுந்தரமூர்த்தி நாயனார் நாணுகின்ற காதல் தெய்வத்தன்மையுடன் இணைந்துவிடுகிறதை காண்கின்றோம். எவ்வறத்திலும் இறைவனை இதயத்தில் வைத்து நிறைவுறுகின்ற பேரின்பக்காதலைக்காண்கின்றோம்.

தருமையாதீனப் புலவர் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் சிவம்பெருக்கும் பிள்ளையார் என்றபொருளில்பேசும்போது இன்றைகாலத்தில் ஒரு காரியத்தை ஒருவர் செய்து முடித்தால் அவரால் முடிக்கப்பட்டதென ஒருவரைக் குறிப்பாகச் சொல்லிப்பாராட்டுகின்றோம். ஆனால் காரியம்நிறைவேறாத பொழுது இது தெய்வகட்டளையென்று இறைவனே காரியமுடிவின்மைக்குக்காரணம் ஒன்று கருதிவிடுகின்றோம்; முட்டின்றி முடிவதுமனிதன் செயல் என்று முட்டுடன் முடிவுறுததுக்குக்காரணம் கடவுள் என்று கற்பிதம் செல்கின்றோம்.

இந்த இருபதாம்நூற்றாண்டிலும் இந்த உலகம் நிலைபோலுடையதாக விளங்குதற்குக் காரணம் நீதி நியாயத்தைக் காப்பாற்றுவோர் சிலர் இன்னும் உலகத்தில் இருப்பதனாற்றான். அந்த

ஒரு சிலரின் சத்தியமே அதர்மம்மேலோங்கி நிற்கும் இந்த உலகத்தைதாங்கி சமன் செய்கின்றது. நீதி நெறியாளர்கள் இல்லாது போயிருப்பார்களானால் இந்த உலகம் எப்பவோ ஒரு நாள் ஆண்ருண்டுபோயிருக்கும் ஒருசிலர் நீதியோடு வாழ்வதனாலேயே உலகம் வாழ்கின்றமைதான் உண்மையாகும்.''

தென்னைவட்டுக்குள்பதுங்கிக் கிடந்த தாலிக்கொடி!

புத்தூர், புதன்

பெண்ணை வழிமறித்து பலாத்காரமாக அறுத்துக் கொண்டதாகக் கூறப்படும் தாலிக்கொடியை பொலிஸார் தென்னைமர வட்டுக்குள்ளிருந்து மீண்டனர்.

கதிரிப்பாயிலுள்ள தோட்டமொன்றுக்குள் தன்னந்தனியனாக நடந்துசென்றுகொண்டிருந்த பெண்ணை வழிமறித்து இருவர் அவரின் தாலிக்கொடியை பலாத்காரமாகப் பறித்துக்கொண்டு ஓடியதாக அச்சுவேலி பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

கந்தசாமி மனோன்மணி இதுசம்பந்தமாக பொலிஸில் புகார் செய்தார்.

சந்தேகநபர்களான வல்லிபுரம் நாராயணநாதன், சின்னராசா சீவரத்தினம் ஆகிய இருவர்களையும் அச்சுவேலி பொலிசார் கைது செய்தனர்.

இவர்களிருவரையும் சார்ஜண்ட் சதாசிவம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி துரத்திப்பிடித்து கைதுசெய்தது. பொலிஸார் நடாத்திய புலன் விசாரணையை அடுத்து, தென்னைமரவட்டு ஒன்றுக்குள்ளிருந்து தாலிக்கொடியை மீட்டனர்.

வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'உரிமை பெற எவருடனும் சேரத்தயார்' — அமிர்

மாவிட்டபுரம்,புதன்

''நாம் இமமுறை உரிமை தரும் எந்தக் கட்சியுடனும் சேருவோம். இழந்த உரிமைகளை உடன் தருவதற்குவழி செய்யும் அரசுக்குத்தான் எமது ஆதரவை அளிப்போம்''

இவ்வாறு காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிடும் திரு செல்வநாயகத்தை ஆதரித்து பலாலி அம்மன் கோவிலுக்குஅருகாமையில்நடந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்துரையாற்றுகையில் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு ஏ. அமிர்தலிங்கம் கூறினார்,

திரு. மு. சின்னையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், சிங்கள இனத்தில் ஏதேச்சாதிகார சின்னமாக 57ம் ஆண்டு சிங்கள அரசு கொண்டுவந்த 'சிங்களச் சிறி'யை எதிர்த்து காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் உட்பட நாமும் போராட்டம் நடாத்தினோம். சிறி எதிர்ப்புப் போராட்டம் சர்வகட்சிகளின் ஆதரவுடன் நடைபெற்றது. 18 வருடங்களாக இந்திய தி மு க டால்மியா புரத்தை கல்லக்குடியாக்க போரடியதன் பயனாகத்தான் தற்போது கல்லக்குடி என்ற பெயர் 'டால்மியபுரத்துக்கு சூட்டப் பட்டுள்ளது. இதே போல எமது போராட்டமும் தொடர்ந்து நடைபெறுகிறது. ஒரு காலத்தில் சிங்கள சிறி அழிக்கப் பட்டேதீரும். இறுதிவரை அதற்காகப்போராடுவோம். மக்களாட்சிமூலம் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டால்தான் இந்த சிறீப் பிரச்னை தீரவழி பிறக்கும்என எதிர்பார்க்கின்றோம்.

ஸ்ரீமா தமிழ்இன உரிமையைக் கொடுப்பது அவரது நோக்கமல்ல. நீதிமன்ற மொழி சிங்களத்தில் இருக்க வேண்டும் என்று அதே ஸ்ரீமாவின் கொள்கைக்காகவே திரு. வி. பொன்னம்பலம் போட்டியிடுகிறார். மட்டக்களப்பு முன்னாள் எம் பி திரு செ இரசதுரையும் பேசினார்.

— —

களவு

மாவிட்டபுரம், புதன்

தோட்டத்தில் கிடந்த 1,800 ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் யந்திரத்தை இனந்தெரியாதவர்கள் களவாடினார்களாம்.

பன்னாலையைச் சேர்ந்த கார்த்திகேசு கரம்பமூர்த்தி என்பவர் காங்கேசன்துறைப் பொலிசில் செய்துள்ள புகாரில் எனது தோட்டத்தில் இரவுநேரத்தில் 1825 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் பம்பு இருந்தது காலையில்சென்றுபார்த்ததும் இனந் தெரியாதவர்களால் களவாடப்பட்டிருந்ததைத அறிய முடிந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்துக்குப் பல நன்மைகளையும் செய்ய இடமுண்டு. அவ்வித வாய்ப்பு இனி இராஜசேகரத் தாருக்குக் கிடைப்பதாயின் அதுவும் திருவருளே!

0 0 0

ஓதிய ஞானமும் ஞானப்
பொருளும் ஒலிசிறந்த,
வேதியர் வேதமும் வேள்
வியுமாவன விண்ணு
மண்ணும், சோதியுஞ்
செஞ்சுடர் ஞாயிறு
மொப்பன தூமதியோடு,
ஆதியு மந்தமுமானவை
ஐயாறனடித்தலமே.

—அப்பரடிகள்

'ஆசிரியரின் முக்கியத்துவம்'

கொடிகாமம், புதன்

''ஆசிரியன் என்பவன் நாட்டின் முதுகெலும்பு அவன் தான் அறிவு வளர்ச்சியை நான்கு சுவர்களுக்கு மத்தியில் மட்டுமல்லாமல் பரந்த உலகெங்கும் பரப்புகிறான், அவனே நாட்டின் முன்னேற்றத்துக்குத்தேவையானவன் ஆசிரியனின் தேவை நாட்டுக்கும் நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் அவசியம்'',

விடத்தல்பளை கமலாசனி வித்தியாசாலையில் கடமையாற்றி காலஞ்சென்ற திரு. வா. சுவாமிநாதனின் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் பேசிய கவிஞர் வே: குமாரசாமி இவ்வாறு கூறினார்.

திரு. பரஞ்சோதி, பொ. அருணாசலம், திருமதி ச. பேரம்பலம் உட்படப் பலர் பேசினர். ......

சங்க நிர்வாகிகள்

சாவகச்சேரி, புதன்

மீசாலை காந்திஜி ஐக்கிய நெசவு தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. வ. ந. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. புது வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்.

தலைவர் வ. ந. நவரத்தினம் உபதலைவர் க. சாளீஸ், செயலாளர்வே. மார்க்கண்டு உப செயலாளர் ஆ திரவியநாயகம், பொருளாளர் பூ. நாகலிங்கம். நான்கு பேர் நிர்வாக அங்கத்தினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நெசவு தொழிலாளரின் முயற்சியால் இயங்கும் நெசவு நூல் நிலையம் தென்மராட்சி மக்களுக்கு மிகவும் உதவியாக உள்ளதாயும். இந்நிலையம் நன்கு வளர்ச்சி பெற எல்லோரும் ஒற்றுமையாக உழைக்கவேண்டும் எனவும் கேட்டுக்கெண்டார்.

பூ. நாகலிங்கம், மா. நாகலிங்கம், செயலாளர் வே. மார்க்கண்டு ஆகியோர் பேசினர்.